# வெளிச்சம்

ஆடி. ஆவணி - 1992
20/-



விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

உங்கள் அனைத்துத்
தேவைகளையும் நிறைவேற்றும்
நிறுவனம்



**தமிழருவி**

71, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# தமிழன் வீரம்

புதுவை இரத்தினதுரை

சீனத்து "Y 8" க்கு
எங்கள் தினசரிகள் வைத்த பெயர்
'சகடை''
அகல விரித்த சிறகொடும்,
அலறுகின்ற உறுமலுடனும்,
எங்கள் தாயகத்து வான் பரப்பில்,
சகடை வரும்.
பெரிய, பெரிய ''பீப்பாக்குண்டை''
இது பொழியும்.
பின்னர்,
திமிருடன் அசைந்து, அசைந்து போகும்,
நிமிர்ந்து நின்ற வீடுகள்,
கடைகள்,
நிலத்தில் விளைந்த நெல்லும், கீரையும்,
முற்றத்தெழுந்த முல்லை, மல்லிகை,
பத்து வயதுப் பாலன்,
பால்குடி,
ஆடைகட்டி அழகு பார்க்கும்
சின்னப் பெண்கள்,
சகடை போடும் பீப்பாக் குண்டினால்
சகதியாகி.......

எல்லாம் அழியும்.
என்னிடமிருந்து எப்படித் தப்புவாய்
என்பது போலக் கண்கள் சிவக்க,
கைகள் துடிக்க,
புலிகள் பார்ப்பர்.
அகல விரித்த சிறகொடு சகடை
அசைந்து, அசைந்து திமிருடன் போகும்.
5 - 7 - 92 ஞாயிற்றுக்கிழமை
காலம் வந்தது.
புலிவீரன் காத்திருந்தான்.
சகடை வந்தது.
குத்திக் கொண்டு கீழே வந்து
குண்டைப் போட்டு, மீண்டும் நிமிர்கையில்
வேங்கை கையில் இருந்த கருவி
வெடியைத் தீர்த்தது.
மின்னலும்,
இடியும்,
சேர்ந்த முழக்கம்.
சகடைத் துகள்கள்
நிலத்தில் சொரிந்தன.
தமிழன் வீரம் உலகு புரிந்தது.

□□

"வெளிச்சம்"
கலை, இலக்கிய
சமூக இதழ்

வெளியீடு:
விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகம்

இதழ் அமைப்பு:
இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

முகப்போவியம்:
"ராஜன்"

உருவாக்கம்:
"ஆசிரியர் குழு"

அச்சு:
ம. மரியதாஸ்

# தமிழீழத்தேசியத்தை நேசித்த கோவை மகேசன்

கோ. மகேந்திரராசா

இன்று, எமது தமிழீழதேசம் தனக்கென்று ஒரு சுதந்திரமான அரசை அமைத்துக் கொள்ளவில்லை. என்றாலும் கூட அதை நோக்கிய பாதையில் நெடுந்தூரம் வந்து விட்டது.

இன்று, தமிழீழம் சிறிலங்காவுக்கு அடிமைப்பட்ட நாடல்ல. அதன் வல்லாதிக்கக் கரங்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் ஒரு தேசம். சிறிலங்காவின் தளைகளைப் படிப்படியாக அறுத்தெறிந்து கொண்டிருக்கும் ஒரு தேசம்.

தமிழீழத்தை தனது இரும்புப்பிடிக்குள் வைத்திருப்பதற்காக சிறிலங்கா அரசு, தனது வளங்களில் பெரும்பகுதியைச் செலவிட்டுத் தனது இனத்தின் ஆயிரக்கணக்கான இளைஞர்களைச் சாவுக்கு இரையாக்கிப் போரிட்டுக் கொண்டிருக்கின்றது.

தமிழீழத்தின் உருவாக்கமானது, ஏகாதிபத்திய, பிராந்திய வல்லரசுக் கனவுகண்டு கொண்டிருக்கும் இந்திய ஆளும் வர்க்கத்துக்கு, தங்கள் கனவு — பகற்கனவாகப் போய்விடும் அச்சத்தைக் கொடுத்துள்ளது எனவே தமிழீழத்தைக் கருவிலேயே அழித்து விடத் துடிக்கின்றது.

உலகத்தில் தனக்கென ஒரு அரசே இல்லாத இனம், தனித்திருக்கின்ற ஒரு இனம், ஒரே நேரத்தில் இரண்டு பலம் பொருந்திய அரசுகளுடன் போரிடுகின்றது. தமது இரத்தத்தை, உயிரை விலையாகக் கொடுத்து முழுமக்களுமே இப்போர்க்களத்தில் வியூகம் அமைத்து நிற்கிறார்கள்.

''அடிமைத் தளையை அறுத்தெறிவோம்
ஆக்கிரமிப்புக் கரங்களை உடைத்
- தெறிவோம்
உடலும் வேண்டாம் - எமக்கு
உயிரும் வேண்டாம்.
மானம் உண்டு - எமக்கு
விடுதலை வேண்டும்.''

இவ்வாறு ஆர்ப்பரித்து, தியாகத்தின் மொத்த வடிவமாகக் களத்தில் நிற்கின்றது எமது இனம்.

போர்க்கருவிகளை ஏந்தியிராத சாதாரண மக்கள் மீது - பெண்கள் - குழந்தைகள் —வயோதிபர்கள் எல்லோர்மீதும் அரசபடைகளினதும், காடையர்களினதும் கொலைத் தாக்குதல்கள் நிகழ்த்தப்படுகின்றன.

பொதுமக்களின் இருப்பிடங்கள் மீது குண்டுத் தாக்குதல்கள்,

எதிரியால் ஏற்படுத்தப்பட்ட பட்டினித் தாக்கங்கள்,

மருந்தின்றி நோய்களால் ஏற்படும் தாக்குதல்கள்.

இப்படியாக...

எல்லாவிதமான அவலங்களையும்,

சோகங்களையும் தாங்கி நிமிர்ந்து நிற்கின்றோம்.

இவ்வாறான காலகட்டத்தில் வாழும் நாம், எமதுவாழ்வையும்,எம்முடன்வாழ்ந்த, வாழ்கின்ற மனிதர்களையும், ஒரு பத்து, இருபது, முப்பது வருடங்களுக்கு பின்னோக்கிச் சென்று பார்ப்போமாகின் - இது மிக அவசியமானதும் கூட - நாம் எதன் மீது நிற்கின்றோம் என்பதையும், எமது பங்கு என்ன என்பதையும் புரிந்து கொள்வோம்.

எழுபதுகளின் நடுப்பகுதி, க. பொ. த உயர்தரப்பரீட்சைக்காகப் படித்துக்கொண்டிருந்தேன். பத்திரிகைகள், புத்தகங்கள் வாசிப்பது எனதுபிரதான பொழுதுபோக்கு. இந்நேரங்களில் ''சுதந்திரன்'' பத்திரிகையை நான் விரும்பிப்படிப்பேன். அதில் கோவை மகேசனின் எழுத்துக்கள் என்னை மிகவும் கவர்ந்தன. விடுதலைப் போராட்டத்தில் நான் இணைவதற்கு இருந்த காரணிகளுள் மகேசனின் எழுத்துக்களும் ஒன்றாகும்.

நான் இயக்கத்தில் இணைந்து செயற்படுங்காலங்களிலும் 1983ம் ஆண்டு கோவை மகேசன் சிறைக்குச் செல்லும் வரையும் இவரது எழுத்துக்களை நான் படித்திருக்கின்றேன்.

1984 இற்குப்பின் தமிழ்நாடு சென்ற இவர் 'வீரவேங்கை' பத்திரிகையைத் தொடங்கி அதன்மூலம் தொடர்ந்தும் போராட்டத்திற்காக எழுதி வந்தார்.

இவ்வாறாக பத்திரிகைகளில் இவரது எழுத்துப் பணிபோல் ''நெஞ்சம் நிறைந்த தம்பி'' ''அரசியல்மடல்'' ''துரோகிகளே தூரவிலகுங்கள்'' ''மே 22'' ''செல்வா அஞ்சலி'', ''நான் கைதியானதேன்'' போன்ற நூல்களையும் காலத்திற்கேற்றவாறு எழுதி வெளியிட்டார். இந் நூல்கள் தமிழீழ மக்களிடம் இன உணர்வையும், தன்மானத்தையும், போர்க்குணத்தையும் தட்டியெழுப்பி விட்டன.

எழுபதுகளிலேயே தேசிய உணர்வும், விடுதலை உணர்வும், போராட்ட உணர்வும் தமிழீழ மக்களிடம் தோன்றி வளர்ந்து வந்தது எனக்குறிப்பிடலாம். இதற்கு மகேசனின் எழுத்துக்களும் கணிசமான பங்கை வகித்தன. அந்நேரத்தில் மகேசனின் எழுத்துக்களையும், அதற்கூடாக மகேசனையும் அறிந்திராத மக்களை நாம் பார்ப்பது அரிது.

தமிழ் இன உணர்வாளர்களை இவரது எழுத்துக்கள் ஊக்கப்படுத்தின. வறட்டுத் தத்துவத்துள் ஒளிந்து கொண்டு தேசியம் பேசியவர்களை பகிரங்கமாக விவாதத்திற்கு இழுத்தார், துரோகிகளை அம்பலப் படுத்தினார்; இடித்தார்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் கூட்டணித் தலைமையானது தனது இலக்கை, இலட்சியத்தை மறந்தது. தங்கள் உல்லாச வாழ்க்கை வசதிகளை நிரந்தரமாகத் தங்க வைக்க - பதவிச்சுகங்களைச் சுகிக்க விரும்பி எதிரிகளான சிங்கள இனவெறியருடன்

கூடிக்குலாவினர். ஆனால் கோவை மகேச னின் எழுத்து மக்களை விழிப்புடனேயே வைத்திருந்தது.

கூட்டணித் தலைமையின் தவறான பாதையைச் சுட்டிக் காட்டினார். அவர் களின் தவறுகளைத் தட்டிக் கேட்டார். விளைவு — கூட்டணித்தலைமை மகேசனை வெறுத்து, கட்சியிலிருந்து வெளியேற்றியது.

இக்காலகட்டமே தமிழ் மக்கள் மத்தி யிலிருந்த மிதவாதத் தலைமையான கூட்ட ணித் தலைமையின் சுயநலனும், துரோ கத்தனமும் தமிழீழ மக்களால் இனங் காணப்பட்டு இவர்களை மக்கள் நிராகரிக் கத் தொடங்கிய காலம்.

தம்மைத் தீவிரவாதிகள்போன்று காட்டி மிதவாதத் தலைமையை தமதாக்க சில சந்தர்ப்பவாதிகள் பிரயத்தனம் செய்தனர்.

இன்னும் சில சுயநலவாதிகளும்-துரோ கிகளும் தாங்களும் ஆயுதப்போராளிகள் என அட்டைகளை ஏந்தி வலம் வந்தனர்.

ஆனால் மகேசன் அன்றே, ''தமிழ்மக் களின் தலைவன் தம்பி பிரபாகரன், புலிகள் இயக்கமே தமிழ்மக்களின் காப்புப் படை'' என்று கூறி மேற்குறித்த வேடதாரி களையும் சந்தர்ப்பவாதிகளையும் நிரா கரித்தார்.

இவ்வாறாக மகேசனின் நேரிய பார் வையும், தமிழ் இனப்பற்றும், போர்க்குண மும் இவருக்கு பல இன்னல்களைத் தந்தன. ஆபத்துக்களின் மத்தியிலேயே வாழவேண்டி இருந்தது.

இன்று நாம் தமிழ்த்தேசிய உணர்வுக் குள்ளும் - போர்ச் சூழலுக்குள்ளும் வாழு கிறோம். போராட்டத்துடனேயே எமது வாழ்க்கையை இணைத்துப் பார்க்கின் றோம். உழைப்பு - வீரம் - தியாகம் என்பன வற்றுக்கு இன்று உள்ள பரிமாணமும், பத்து - இருபது வருடங்களுக்கு முன்பிருந்த உழைப்பு - வீரம் - தியாகத்திற்கான பரிமா ணம் வேறு வேறானவை.

இவ்விரண்டு கால இடைவெளிகளை யும், அக்கால இடைவெளிகளில் இருந்த உழைப்பு - வீரம் - தியாகம் போன்றவற்றை யும் நாம் ஒரே தராசில் வைத்துச் சமப் படுத்திப் பார்க்க முடியாது. ஏனென்றால் காலத்தினாலும், சூழ்நிலைகளினாலும் உழைப்பு - வீரம் - தியாகம் இவை மூன்றும் எப்போழுதுமே உயர்வானவையே.

தமிழ் நாட்டில் இவர் வாழ்ந்த காலத் தில் நாம் இந்தியப்படைகளுக்கெதிராகவும், தமிழீழம் தொடர்பான இந்தியவெளியு றவுக் கொள்கைகளுக்கு எதிராகவும் போரா டிக்கொண்டிருந்தோம் அவ்வேளையில் இந்திய அரசின் துரோகத்தை, தனது எழுத் துக்கள் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவித்தார்.

இந்தியப் படைகள் செய்த தமிழ் இனப்படுகொலைகளை, மனித உரிமை மீறல்களைத் தமிழ் நாட்டு மக்களுக்கும், உலகத்திற்கும் எடுத்துக் கூறினார். 'தமிழ்த் தேசியத்தின் சின்னம் பிரபாகரனே'' என்றும் ''தமிழ் மக்களின் தலைவன் பிரபாகரனே'' என்றும், ''புலிகள் இயக்கமே விடுதலை இயக்கம்'' என்றும் எடுத்துக் கூறினார்.

மொத்தத்தில் இந்தியாவில் இருந்து கொண்டே இந்திய அரசிற்கெதிரான ஒரு யத்தத்தைத் தனது போனாமூலம் நடாத் திக் கொண்டிருந்தார்.

எண்பத்திரண்டாம் ஆண்டு தமிழீழ அரசியலில் ஒரு குழப்பமான காலகட்ட மாகும். இந்த நாட்களில் மகேசனைச் சந்தித்து முதன்முதலில் கலந்துரையா டினேன்.

இக்காலங்களில் எமது இயக்கத்தின் கருத்துக்களைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் இவர் செயற்பட்டார். இவர் வேலை செய்த பத்திரிகையின் உரிமையாளர் தமிழ் மக்களின் தலைமையை தனதாக்க வேண்டும் என்ற ஆசையோடு வாழ்ந்தவர். கூட்டணித்தலைமையோ, சிங்கள அரசுடன் கூடிக்குலாவிய தமது திருதாளங்களை அம்பலப்படுத்திய கோவை மகேசனுக்கு எதிராக பகிரங்கமாகவே செயற்பட்டனர்.

ஆயுதம் தாங்கிய, மற்றைய துரோக சுயநலக் குழுக்களோ மகேசனை மிரட்டித் திரிந்தன.

சிங்கள அரசும், அதன் படைகளும் மகேசனை விழுங்க நேரம் பார்த்திருந்தன. இவ்வாறான நிலைமைகளில் கூட எமது இயக்கத்தின் கருத்துக்களைத் துணிந்து அப்படியே தனது பத்திரிகையில் வெளியிட்டார்.

''பத்திரிகையை விட்டு வெளியேற்றுவேன்'' என்று முதலாளியினால் நெருக்கப்பட்டார்.

சிங்கள காவல்துறை எந்நேரமும் பாயும் என்பதால் இவருக்கு வாடகைக்கு வீடு கொடுக்க மக்கள் பின் வாங்கினர்.

''பத்திரிகையைத் தடைசெய்வோம்'' 'உள்ளே போடுவோம்' என்று அரசும் மிரட்டியது.

துரோகிகளும் பலவாறாக அச்சுறுத்தினர்'

இந்த வேளைகளில் ஒரு நாள் மகேசனுடன் நான் கலந்துரையாடிய போது அவருக்குக் கூறினேன்.

''அண்ணா நாங்கள் ஆயுதங்களுடன் தலைமறைவாக வேலை செய்பவர்கள். எனவே இத்தகைய மிரட்டல்களை எதிர்கொள்வது சுலபம். ஆனால் நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள். நாங்கள் ஏதாவது ஒரு வழியில் உங்களுக்கு உதவமுடியுமா?'' என்று கேட்டேன்.

மகேசன் கூறினார்

'எனக்கு ஒன்றும் தேவையில்லை. நான் சமாளித்துக்கொள்கின்றேன் பிரச்சனைகள் வந்தால் பிறகு பார்ப்பம்''

இங்கு இவரின் துணிவையும்,

இவரின் கொள்கைப்பற்றையும்,

இவரின் நேர்மையையும்,

இவரின் போர்க்குணத்தையும், நாம் காணுகின்றோம்.

எமது இயக்கம் சிங்கள ஆட்சியாளர்களால் தடை செய்யப்பட்டு, எமது அறிக்கைகளோ அல்லது எம்மைப்பற்றிய செய்திகளோ பிரசுரிப்பது குற்றம் என்று பிரகடனப்படுத்தப்பட்ட காலம அது.

ஆனால் ''1982 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22ம் திகதி நடைபெற இருந்த ஜனாதிபதி தேர்தலை தமிழ் மக்கள் பகிஸ்கரிக்க வேண்டும்'' என்று கோரி ஒரு துண்டறிக்கையை வெளியிட்டிருந்தோம.

அந்த மாதம் 22 ம் திகதிதான் சுதந்திரன் பத்திரிகை வெளிவர வேண்டிய முறையாகும். ஆனால் எமது அறிக்கையை முன்பக்கத்தில் வெளியிட்டு இரண்டு நாட்களுக்கு முன்னரேயே மக்களுக்குக் கிடைக்கக் கூடியவாறு பத்திரிகையை வெளியிட்டார். இவ்வாறாக இவரின் துணிச்சல் மிகுந்த போராட்டச் செயற்பாடுகளுக்குப் பல சான்றுகளைக் கூறலாம்.

இந்தியாவில் மகேசனைச் சந்தித்த சந்திரகாசன் ''ஈழசுதந்திரன்' என்ற பத்தி

ரிகை ஆரம்பிக்கப் போகின்றேன். அதன் ஆசிரியராக செயற்படுங்கள்'' என்று மகேசனைக் கேட்டார்.

'உங்கள் பாதை பிழை - நான் தம்பியின் பாதையில் நம்பிக்கை கொண்டுள்ளேன். ஆகவே உங்களுடன் நான் வேலை செய்வது சரிப்பட்டுவராது' என்று சந்திரகாசனுக்கு கூறியதாக பின்னர் என்னிடம் கூறினார்.

அதே சமயம் 'வீரவேங்கை' பத்திரிகை மூலம் திம்பு பேச்சுவார்த்தை தொடர்பாக எமக்கும் கருத்துக்களை இடித்துக் கூறத் தயங்கியதில்லை.

14 வயதில் தனது பொது வாழ்வை ஆரம்பித்தார்.

சிற்றூழியராக, பத்திரிகை ஆசிரியராக, பணியாற்றினார்.

தமிழ்த்தேசியத்திற்கு வலுசேர்த்ததற்காக சிங்கள அரசால் பலதடவைகள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

பலமாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

1933 வெலிக்கடைப் படுகொலை நடைபெற்றபோது அங்கேயே இருந்தார்.

1984ம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் வாழ்ந்தார். வீரவேங்கை எனும் பத்திரிகை மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு சேர்க்கும் பணியில் ஈடுபட்டார்.

இவரது இறுதிக் காலம் நோயில் கழிந்தும் கூட தனது எழுத்துப் பணியை நிறுத்தவில்லை.

1992 ம் ஆண்டு யூலைமாதம் 4ம் திகதி இறந்தார்.

ஒழுக்கமுள்ளவர்.

நேர்மையானவர்.

கடும் உழைப்பாளி.

சிறந்த பத்திரிகையாளன்.

பகுத்தறிவாளன்.

இலட்சியவாதி

கொள்கைப்பற்றுள்ள போராளி.

இத்தகைய உயர் பண்புகளைக் கொண்ட மதிப்புக்குரிய கோவை மகேசன் அவர்கள் இன்று எம்மிடையே இல்லை. இருந்தபோதும், தமிழ்தேசம் அவரை என்றும் மறக்காது.

□□

# லெப். கேணல் திலீபனின்

## ஐந்தாம் ஆண்டு நினைவில் நனைவோம்.

நல்லூரின் வீதியில் நடந்தது யாகம்
நாலுநாள் ஆனதும் சுருண்டது தேகம்
தியாகத்தின் எல்லையை மீறிய பிள்ளை
திலீபனைப் பாடிட வார்த்தைகள் இல்லை.


''மக்கள் புரட்சி வெடிக்கும்
தமிழீழம் மலரும்''
இது திலீபனின் கனவு
திரண்டெழுவோம்.

— வெளிச்சம் —

# “தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் ஒரு மாபெரும்வீரன்”

## ‘‘முத்தமிழ்க் காவலர்’’

கி. ஆ. பெ. விசுவநாதன்



‘‘தமிழீழ தேசியத்தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு வீரன், அதிலும் மாபெரும் வீரன். இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் இறங்கிய கட்டப்பொம்மன், வ. உ. சிதம்பரம், வாஞ்சிநாதன், பகத்சிங், சுபாஷ் சந்திரபோஸ் முதலியவர்களோடு ஒப்பு நோக்கத்தக்க தலைவன் பிரபாகரன்.

அவன் கொள்கை சரியா? தவறா? அவன் வெற்றி பெறுவானா? தோல்வியடைவானா? என்று சிந்திப்பவர்கள் கூட. அவன் மாபெரும் வீரன் என்பதை ஒப்புக்கொள்கின்றனர்.

உலக வரலாற்றில் ஒரு தனி மனிதனின் காலில் செருப்பு இல்லாமல், கல்லிலும் முள்ளிலும் நடந்து கொண்டு, ஓய்வின்றி மழையிலும், பனியிலும் நனைந்து கொண்டு, தங்க இடமில்லாமல் காட்டிலும், புதர்களிலும் மறைந்து கொண்டு, உணவு இல்லாமல், தரைப்படையும், கடற்படையும், ஆகாயப்படையும் உள்ள இரு வல்லரசுகளோடு பல ஆண்டுகளாகப் போராடிக்கொண்டிருக்கும் நிகழ்சசி, உலக வரலாற்றிலேயே இதுவரை நடந்தது இல்லை. இன்று நடைபெறுகிறது. □□

# திமிர்

முருகையன்

சிறு புழு, கறையான், நத்தை
செருப்பின் கிழ் நசிவது போல்
அறிவுடை மனிதர் நாங்கள்
அழிந்திட இணங்குவோமோ?
பொறுமைக்கும் வரம்புண்டய்யா;
போட்டிக்கும் எல்லை உண்டே,
அறமென்றும் நீதி என்றும்
அரும்பொருள் இன்னும் உண்டே.

இருட்டுக்குட் சுருட்டி வைத்தாய்;
எங்களை நொறுக்கி வைத்தாய்;
கருத்துக்கு முடி போட்டாய்
கண்கட்டு வித்தை காட்டிப்
பொருட்களைத் தடுத்து வைத்தாய்;
புழுக்கமும் பசியில் வாடச்
சுருக்கிட்டாய், தவிக்க வைத்தாய்
சுயநலப் பிசாசம் ஆனாய்.

உனக்குப்போல் கழுத்து, கால், கை,
உனக்குப்போல் மூக்கு, மூளை,
உனக்குப்போல் வயிறு, நெஞ்சம்,
உண்டய்யா எங்களுக்கும்!

'எனக்குத்தான் பூமி முற்றும்'
என்று நீ சொல்லலாமோ?
சினத்தை ஓர் மதம்போல் ஆக்கிச்
சிக்கிப்போய்த் திணறலாமோ?

திமிரினால் நம் மேல் ஏறிச்
செய்யலாம் சவாரி என்ற
நினைவை நீ விடுதல் வேண்டும்.
நெற்றியிற் கல்லை வீசிச்
சமரிலே கோலியாத்தைத்
தாவீது வெற்றி கொண்டான்;
எமனாகி முடிவு கண்டான்
இதனை நீ நினைக்க வேண்டும்.

கண்ணீரும் வெப்ப மூச்சும்
கதறலும் பதைப்பும் சாவும்
வெண்ணீற்றுச் சாம்பல் மேடும்
வெதும்பலும் விளைவிக்கும்; நீ
மண்ணோடு மண்ணாய்ப் போவாய்
மமதையின் மதம் பிடித்த
கண்ணோட்டம் ஒழியுமட்டும்
கட்டாயம் ஓயோம், நாங்கள் □□

# வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாட்டார் பாடலில் கமுகஞ்சண்டை

முல்லைமணி

ஈழத்தில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் (1797 - 1948) ஆட்சியாளருக்கெதிராக எதிர்ப்பியக்கங்கள் பல்வேறு இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறுவிதமாக இடம்பெற்றிருக்கின்றன. 1802 ம் ஆண்டு 27ம் திகதி செய்துகொள்ளப்பட்ட ஏமியன் உடன்படிக்கையின்படி இலங்கையிலுள்ள டச்சுப்பிரதேசங்கள் அனைத்தும் பிரித்தானியர் வசமாகின. கண்டிராச்சியமும். வன்னிராச்சியமும் சுதந்திரமாகவே இயங்கின. கண்டி ராச்சியத்தில் கண்ணுச்சாமி என்னும் இயற்பெயருள்ள தமிழ் அரசன் ஸ்ரீ விக்கிரமராச சிங்கன் என்றும் சிம்மாசனப் பெயருடன் ஆட்சிபுரிந்து வந்தார். வன்னிராச்சியத்தை குலசேகரம் வயிரமுத்து பண்டாரவன்னியன் ஆண்டு வந்தான். 1803 ஆம் ஆண்டில் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்படும்வரை வன்னி சுதந்திர சிற்றரசாகவே இருந்தது. எனினும் 1811 ஆம் ஆண்டுவரை பண்டாரவன்னியன் ஆங்கில நிர்வாகத்திற்கெதிரான போராட்டங்களில் ஈடுபட்டு, வீரச்சாவை எய்தினான். கண்டிராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு ஆங்கிலேயர் பலமுறை படையெடுத்தும் முடியாமற்போய் விட்டது. கண்டிப்படையெடுப்பில் தோல்வி கண்ட ஆள்பதி நோத் பதவியை இழக்கவேண்டி ஏற்பட்டது. பிலிமத்தலாவை என்னும் கண்டி அதிகாரியின் சூழ்ச்சியினாலேயே கண்டிராச்சியம் பிரிந்தானியர் வசமாகியது. 1815 இல் பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றியபோதும் அதன் பின்பும் அவர்களுக்கெதிரான கலகங்கள் இடம்பெற்றன. 1918 ஆம் ஆண்டு கண்டிக் கலகம் இவ்வகையில் குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியர் தம். ஆட்சியை நிலை நிறுத்தத் தமக்கு விசுவாசமான அடிவருடிகளான சிலரைப் பரம்பரை பரம்பரையாக உத்தியோகத்தில் அமர்த்தினர். அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், நீதிபதிகள், கலெக்டர்கள் போன்ற பதவிகளை வெள்ளைத்துரைமாரே வகித்தனர். மணியகாரர், முதலியார், உடையார் விதானையார் ஆகிய பதவிகளை ஆட்சியாளருக்கு விசுவாசமான உயர் குழுவினர் வகித்து வந்தனர். இவர்

கள் செல்வமும் செல்வாக்கும் பெற்ற ஐரோப்பிய பிரபுக்களைப் போலத் தங்களைப் பாவனை செய்துகொண்டனர். விளை நிலங்கள் இவர்களின் உடைமையாகவே இருந்தன. விவசாயமே சாதாரண மக்களின் தொழிலாக இருந்தது. ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமான சிறிதளவு நிலத்தையும் சந்தர்ப்பம் வாய்க்கும்போது உயர்குலத்தினர் அபகரித்துக் கொண்டனர். எனவே பாட்டாளி மக்கள் பெரும்பாலும் விவசாயக் கூலியாளராக அல்லது வேட்டையாடுவோராகவே இருந்தனர்.

வெள்ளைத்துரைமார் பிரித்தானியரின் நலவுரிமைகளைப் பேணுவதில் கண்ணுங்கருத்துமாயிருக்க சுதேச உயர் குலத்தினர் தங்கள் நலவுரிமைகளைக் காப்பதில் கருத்தைச் செலுத்தினர்.

வெள்ளைத் துரைமாரின் நிர்வாகமும் ஊழல் நிறைந்ததாகவே காணப்பட்டது. ''ஆறுமுகநாவலரின் அந்திம காலத்தில் (1822 — 1879) யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் துவைனம் துரையின் அநீதி மிகப் பிரகாசமானது; மழையின்றிய பஞ்ச காலத்திலும் ஏழைகளுக்குக் கிடைக்கவேண்டிய அரசாங்க உதவிகளை துவைனமும் கீழுள்ளவர்களும் அப்படியே உறிஞ்சிவிட்டார்கள் (பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை 'ஆறுமுகநாவலர்' நாவலர் நூற்றாண்டு நிறைவு மஞ்சரி, சாவகச்சேரி 1979. பக் 127)

இக்காலத்தில் வவுனியா முல்லைத்தீவுப் பகுதிக்கு உதவி அரசாங்க அதிபராக இருந்தவர் கோட்டன்துரை (1. 4. 1883 — 20. 10. 1883) இவருக்குக் கீழே இருந்த சுதேச பிரபுகளும் தங்கருமம் பார்ப்பதில் சமர்த்தர்களாயிருந்தனர். எனவே பாதிக்கப்பட்டவர்கள் பாட்டாளி மக்களே. அக்காலத்தில் மத்திய தர வர்க்கம் வன்னியில் தோற்றம் பெறவில்லை.

தண்ணீரூற்றிலுள்ள உயர் குழாத்தினது நெல்வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதற்வதற்கு இடஞ்சலாகக் கமுகஞ்சோலை இருந்தது. இக்கமுகஞ்சோலை ஏழை மக்களுக்குரியது. இவர்களுக்கு எந்தவித அரச செல்வாக்கும் இருக்கவில்லை. தம்பொருளாதார நலத்தைப் பேணுவதற்காக கமுகுகளைத் தறிப்பதன் மூலம் நெல்விளைச்சலைப் பெருக்கலாம்; அரசுக்கும் அதிக வரி கிடைக்கும் எனக் கோட்டன் துரைக்குச் சிபார்சு செய்தனர் சுதேச உத்தியோகத்தர்கள். கமுகு மரங்களைத் தறிக்கும்படி கோட்டன் துரையிடமிருந்து உத்தரவு வந்தது.

இவ்வுத்தரவை எதிர்த்துக் கலகஞ் செய்தனர் பாட்டாளி மக்கள். இவ்வெதிர்ப்பியக்கத்திற்குத் தலைமை தாங்கினார் காட்டுராசா கதிர்வேல் வினாசி என்பவர். முல்லைத்தீவுப் பகுதி முல்லை, மருதம், நெய்தல், நிலங்கள் பொதிந்த பகுதியாகும். காடும் காடு சார்ந்த இடமுமே முல்லைநிலம். முல்லை நில மக்கள் வேட்டையாடுவதிலும் காடுபடு திரவியங்களான யானைத்தந்தம், சாயவேர், மான்கொம்பு, மான்தோல், புலித்தோல் ஆகியவற்றைச் சேகரிப்பதிலும் ஈடுபடுவர். இவர்களில் தலை

வனாக கதிர்வேல வினாசி திகழ்ந்திருக்க வேண்டும். இதனால் இவருக்குக் காட்டுராசா என்ற பட்டம் கிடைத்திருத்திருக்கலாம். இவர்களின் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாது கோட்டன்துரை ஓட்டம் எடுக்க வேண்டி ஏற்பட்டது.

இந் நிகழ்ச்சியைச் சித்திரிப்பதே 'கமுகஞ் சண்டை' என மகுடமிட்ட நாட்டார் பாடல் (பதிப்பு; முல்லைமணி. தண்ணீரூற்று கதிரவேலு வினாசித்தம்பி நினைவு வெளியீடு. யாழ்ப்பாணம் 1979 பக்கம் 3) வாய்மொழியாக இருந்த இப்பாடலை வற்றாப்பளை சின்னப்பிள்ளை இராசசிங்கத்திடம் கேட்டு எழுதித்தந்தவர் கணுக்கேணி சோதிடர் இராமலிங்கம் அவர்கள். இப்பாடலில் சிறுபகுதிகள் விடுபட்டிருக்கலாம் எனத்தோன்றுகின்றது.

''கமுகு தறிக்கில் தலையுடைபடுவீர் சங்காரப் பயல்காள்
கத்திக்குத்து விழுகுது பார் பார் காத்து சாய் பென்றான்
திரண்டசனத்தைக் கண்ணால் கண்டான் கோட்டன் துரைதானும்
குமுகுமு என்றே வாரிப்பாயுது குஞ்சி நிலக்குதிரை
அரைநாழிகைக்குள் அரண்மனை சேர்ந்தான் கோட்டன் துரைதானும்,

ஓட்டம் எடுத்த கோட்டன் துரை யாழ்ப்பாண அரச அதிபர் துவைனம் துரைக்குச் செய்தி அனுப்பினான். துவைனம் துரைக்கு இந்த நிகழ்சி பெருஞ் சினத்தை மூட்டியது. கலகல என அட்டகாசச் சிரிப்புச் சிரித்தார் அவர். அவரின் மீசை துடித்தது. கண்கள் தீப்பந்தங்கள் ஆயின. வாசல் மந்திரி தாமோதரியை அழைத்து ஆணையிட்டார். மன்னார் பரவர் படையுடன் தண்ணீரூற்றுக்குச் சென்று முகாமிட்டுக் கமுகம் சோலையை அழிக்குமாறு கட்டளை இட்டார்.

வாசலில் மந்திரி தாமோதரியை வாரும் நீரென்றான்
கூடாரங்கள் குடிவகை ஏற்று குரிசை நீரென்றான்
மருந்து, குண்டு, இடிதுப்பாக்கி வண்டியில் ஏற்றென்றான்

குரிசை - மன்னார் பரவர் படைத் தலைவனாக இருக்கலாம். தாமோதரி அரச அதிபருக்குக் கீழ் உள்ள உயர் அதிகாரியாக - கேற் முதலியாராக இருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. பெரியதுரையும் இப்படையெடுப்பின்போது தண்ணீரூற்றுக்குச் சென்றார்.

அங்கே காசி உடையார், கோணர் விதானை, வன்னியசிங்க முதலியார் ஆகியோர் அழைக்கப்படுகின்றனர். பெரிய துரையின் அழைப்பைச் செவியுற்ற இவர்கள் அச்சத்தால் நடுநடுங்கினர். வன்னியசிங்கர் தன் உத்தியோக உடைகளை அணிய மறந்து பெரிய துரையிடம் சாதாரண உடையுடன் சென்றார். பெரிய துரைக்குக் கோபம் வந்துவிட்டது.

''சட்டை தலைப்பா தன்னை மறந்தார் வன்னிய சிங்கருமே
சப்பாத்துத் தோல் தன்னை மறந்தார் வன்னிய சிங்கருமே
வன்னியசிங்கா மதிகேடாநீ வாடா முன்னாலே
சப்பாத்தின்றி வந்திடலாமோ வன்னியசிங்கா நீ
போ போ என்று சினந்து சொன்னான் பெரியதுரைதானும்''

வன்னியசிங்கர் பெரியதுரையைச் சமாதானப்படுத்திக் கமுகு தறிக்கும் பணியில் ஈடுபடுகின்றார். பெருமழை பெய்து கொண்டிருந்தது. நிலமோ சதுப்பு நிலம்; அட்டைக்கடி ஒருபுறம். இந்த நிலையில் ஏவலர் கமுகு களைத் தறித்து வீழ்த்துகின்றனர். இவர்கள் தம் வேதனையை வெளிப் படுத்துகின்றனர். உள்ளூர இவர்களுக்கு இவ் வேலையைச் செய்ய விருப் பமில்லை என்பது இவர்கள் கூற்றிவிருந்து வெளிப்படுகின்றது.

மழையும் பொழியுது மயிரும் நனையுது வன்னிய சிங்கையா
மாட்டோம் என்றால் கேட்கிறீர் இல்லை வன்னிய சிங்கையா
சுளையில் அட்டை சூழந்து கடிக்க துடைப்பார் கையாலே
சுற்றிப் பார்த்துக் கமுகு தறிப்பார் சூழ்ந்த வினையாலே.

கமுகுகள் தறிக்கப்பட்டன. ஊரில் உள்ள ஆடுகள் கோழிகள் அனைத்தும் படையினருக்கு உணவாகிவிட்டன.

''கமுகஞ்சண்டை'' என்னும் இப்பாடல் நமக்கு உணர்த்துவன எவை? மிகச் சாதாரணமான நிகழ்ச்சியொன்று துவைனம் துரைக்கும் கோபத்தை ஊட்டியது ஏன்? இவை சிந்தனைக்குரியவை.

1. அந்நியரான ஆங்கிலேயர் தமது ஆட்சிக்கு எதிராக மக்கள் கிளம்பி புரட்சி செய்து தம்மரசை வீழ்த்தி விடுவார்களோ என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது. அதுவும் வன்னியிலே பிரித்தானியர் முகம் கொடுக்கவேண்டியிருந்த எதிர்ப்பியக்கம் மிகவும் வலுவானதாக இருந் தமை நினைவுக்கு வந்திருக்கலாம். எனவே எதிர்ப்பு மிகச் சாதாரண மானதாக ஒரு சிறிய சம்பவம் தொடர்பானதாக - புறக்கணிக்கத் தக்க சிறியதாக இருந்த போதும் அதனை முளையிலே கிள்ளிவிட வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கிருந்தது.

2. நாவலர் சுட்டிக்காட்டியபடி துவைனம் துரையில் ஆட்சி ஊழலும் அநீதியும் நிறைந்திருந்தது. ஏழை மக்களின் நலன்களைச் சற்றும் கருத்தில் கொள்ளாது உயர் குழாத்தின் நலன்களைப் பேணுவதி லேயே அவர் கவனம் செலுத்தியிருந்தமை நோக்கத்தக்கது. ''யாழ்ப் பாணத்துக் கச்சேரி அநீதி, பொய், கோள் முதலிய புத்தகங்கள் படிப்பிக்கிற கலீசு (College) அதற்குத் தலைவர் Principal) துவைனம் துரை என்கிறார். நாவலர். (இது நல்லசமயம் 5 ஆம் பக்கம்) வன்னி

யைப் பொறுத்த அளவிலும் இவரது கொள்கையில் மாற்றம் இருக்கவில்லை.

3. வீரமும் விடுதலை உணர்வும் வன்னிமக்களின் இரத்தத்தில் ஊறியிருக்கின்றன. சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் இவை பீறிட்டு எழுகின்றன. 'வெள்ளியிட்ட காலுக்கு வெறுங்கால் அடிமையோ' என இங்கு நிலவும் முதுமொழி இதனையே சுட்டுகின்றது.

4. சமுதாய அமைப்பின் கூறுகள் சிலவற்றை இப்பாடல் மூலம் அறிய முடிகின்றது. சுதேச ஆளும் வர்க்கத்திற்கும் ஆளப்படும் பாட்டாளி மக்களுக்குமிடையேயுள்ள வர்க்கமுரண்பாடு, சுரண்டல் ஆகியவை கமுகஞ்சண்டையில் பிரதிபலிக்கின்றன. பிரஞ்சுப் புரட்சிக்கு முன்னர் அங்குள்ள பிரபுக்கள் எப்படி நடந்துகொண்டார்களோ அதே பாணியில்தான் இங்குள்ள உயர்குழாம் நடந்துகொண்டிருக்கிறது.

5. தண்ணீரூற்று, முள்ளியவளைப் பகுதி நீர்வளமும் நிலவளமும் நிறைந்தது. இயற்கையான நிரூற்றுக்கள் பல இங்கு காணப்படுகின்றன. சதுப்பு நிலத்திலேயே கமுகுகள் செழித்து வளரும். அட்டைகள் அதிகமாக இப்படியான நிலத்திலேயே காணப்படும்.

''காய்மாண்ட தெங்கின் பழம் முற்றீ கமுகின் எற்றி வருக்கை கீறி தேமாங்கனி சிதறி வாழைப்பழங்கள் சிந்தும் ஏமாங்கதநாடுக'' போன்ற ஊர்தான் தண்ணீரூற்று எனப் பிறமாவட்டத்தவர் புகழ்ந்துரைப்பது நோக்கத்தது.

6. வெள்ளைத்துரைமாரைக் கண்டவுடனே சுதேச உத்தியோகத்தர் அச்சத்தால் நடுநடுங்கினர்.

''பேராசைக் காரனடா பார்ப்பான் — அவன்
பெரியதுரை என்னில் உடல் வேர்ப்பான்''

எனப் பாரதி பாடியது அக்கால வன்னி உத்தியோகத்தரைப் பொறுத்த அளவிலும் பொருந்தும்.

7. வெள்ளைத்துரைமார் சுதேச உத்தியோகத்தருடன் மிகவும் கொடூரமானமுறையில் நடந்துகொண்ட போதும் அவர்கள் எத்தகைய அவமானங்களையும் பொருட்படுத்தாது அடிபணிந்து நடந்து கொள்வதால் பரம்பரை பரம்பரையாக உத்தியோகங்களைப் பெற்று தங்கள் பொருளாதாரத்தையும் சமூக அந்தஸ்தையும் மேம்படுத்திக்கொள்ள முடிந்தது.

எனவே 'கமுகஞ்சண்டை' என்னும் நாட்டார்பாடல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வன்னிப்பகுதியிலிருந்த சமுதாய நிலைமைகள் வர்க்க முரண்பாடுகள், சுரண்டல்கள், வீரம் சுதந்திர உணர்ச்சி ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகும் எனக் கொள்ளலாம். □□

# நெருப்பின் மக்களே!

சுதர்சினி பாலசிங்கம்

மூச்சுக்கள் நிறபதும்
முண்டமாய்ச் சாய்வதும்
வாடிக்கையாய் தினம் ஆமோ? - இனிப்
பேடிகள் வாழ்த்திடலாமோ?

நேற்றொரு சூரியன்
இன்றொரு சூரியன்
நாளைக்குச் சூரியன் வேறோ? – நாம்
நாதியில்லாப் பிணக் கூறோ?

வந்தவர் வாழ நீ
வகை கெடச் சாய்வதோ
சொந்தமாய் நாடில்லைத் தம்பி - நீ
நொந்த தெல்லாம் போதும் நம்பி

வம்பை வளர்த்தனர்
வாழ்வைப் பறித்தனர்
அம்புகள் தைத்தது போதுமோ? – நீ
அழியுமுன் தீருமோ தாகமே

தாயுடன் தந்தையும்
தீயுடன் போயினர்
தீயென்ன பொல்லாத பேச்சு – அட
நிறுத்தடா! போக் "கவர்" மூச்சு

நேற்றைய போரினில்
சுற்றமும் போன பின்
நாற்றென நிற்கின்ற தோழனே - நீ
நாளைக்கு வேண்டிய வீரனே!

நெஞ்சை நிமிர்த்திடு
நெற்றி உயர்த்திடு
நீள் கரத்தில் வாளை ஏந்து - பகை
நொய்ப்பினில வீழ்ந்திடும் சாய்ந்து

காளையுன் தோள்களால்
நாளைகள் தோன்றிடும்
நாடெல்லாம் விழித்தெழும்
வாளுக்குப் பகைவனைக் காட்டு -உன்
வரலாற்று வரியை நீ தீட்டு.

# நான் ஏமாறத் தயாரில்லை

ரமணன்

வீட்டைக் கூட்டி முடித்த கண்மணி தும்புத் தடியை ஓர் மூலையில் வைத்து விட்டு கட்டில் கிடந்த பக்கம் திரும்பி பார்க்கின்றாள். அங்கே அக்கட்டில் வெறுமையாகக் கிடக்கிறது.

‘‘இந்த மனுசன் இந்த வெள்ளென எங்க போட்டுது ..... சரி ..... வரட்டும். தலைக்கு மேல வேலை கிடக்கு’’ என்று முணுமுணுத்த வண்ணம் முற்றத்துக்கு வருகிறாள். அங்கே முற்றம் கூட்டியபடி நின்ற மூத்த மகள் வித்தியா

‘‘அம்மா இண்டைக்கு நான் எப்படியும் ரியூசன் பீஸ் கட்டவேணும் அப்பாட்டை சொல்லி எங்கையெண்டாலும் மாறித்தரச் சொல்லணை...... இல்லையெண்டால் என்னால இனி ரியூசனுக்கு போக ஏலாது. மற்றப் பிள்ளையள் எல்லாம் காசை கட்டிப் போட்டு நிம்மதியாக வந்து படிக்குதுகள் ..... நான் ரியூசனுக்குப் போகேக்கை எவ்வளவு தூரம்யோசிச்சு... யோசிச்சு போகவேண்டியிருக்கு’’ என்றாள் சிணுங்கியபடி.

‘‘நான் என்னமோனை செய்யிறது கொப்பரும் ஏதோ கஸ்ரப்பட்டு உங்களைப் படிப்பிச்சு விடுவமெண்டு ஒற்றைக் காலில் நிற்கிறார். அந்த மனுசன் என்ன செய்யிறது உந்த இரண்டு பரப்பு செம்பாட்டுக்கை கிண்டித்தான உழைக்க வேண்டிக் கிடக்கு அதிலேயும் இந்தமுறை வெங்காயம் சரியான விழுக்காடு. கொழும்புக்குக் கொண்டுபோக இயலாது என்ன செய்யிறது. யோசியாதை கொப்பர் வரட்டும் கதைச்சுப்பாப்பம் ‘‘என்றவள். சிறிது நேர மௌனத்திற்குப் பின்’’ அது சரி இண்டைக்கு ரியூசனுக்குப் போகேல்லயே’’

இல்லை இண்டைக்கு ரியூசனுக்குப் போகேல்ல என்றாள் வித்தியா. ‘ உவள் கீதா எங்க போட்டாள்’’ என்ற கண்மணி கிணற்றடிப் பக்கம் எட்டிப் பார்த்தாள்.

‘‘கிணற்றடியில நிற்கிறாள் போலக்கிடக்கு ஒருக்கா பார் மோனை’’ என்ற கண்மணி குசினிக்குள் நுழைந்தாள். முற்றத்தை கூட்டி முடித்த வித்தியா கிணற்றடி பக்கம் எட்டிப் பார்த்து

‘‘அம்மா........ அவள் குளிக்கிறாள். இண்டைக்கு

கொமஸ் வகுப்பு ஒண்டு இருக்காம். அதுதான் நேரத்துக்கு வெளிக்கிடுகிறாள் போல கிடக்கு...... அம்மா நான் தண்ணி அள்ளிக் கொண்டு வாறன்'' என்றவள் வாழையடியில் இருந்த தண்ணீர் குடத்தை எடுத்து நாரியில் வைத்தபடி

''இந்தமுறை எப்படியும் ரியூசன் காசு கட்ட வேணும். மாஸ்ரரை எத்தினைமுறை ஏமாத்திறது என்னைப்பற்றி என்ன நினைப்பர்'' என்று தனக்குள் சொல்லிய வண்ணம் கிணற்றடிப் பாதையில் நடந்தாள். கிணற்றடியில் குடத்தை கீழே வைத்து

''கீதா இதுக்குள்ள தண்ணி ஊத்து நான் கொண்டு போறன்'' என்றபடி நிமிர்ந்தாள் வித்தியா மிதியில் நின்ற கீதா வாளியில் தண்ணீரை அள்ளியபடி கேட்டாள்

'ஏனக்கா? நீ இண்டைக்கு ரியூசனுக்கு போகேல்லயே''

''இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை தானே. எனக்கு ரியூசன் இல்ல நான் நாளைக்குத்தான் போறன்'' என்றாள் வித்தியா.

''அக்கா நான் மறந்து போனன் நேற்று ரியூசனால வரேக்க சுஜாதா சொன்னவள் இண்டைக்கு ரியூசனாம் கட்டாயம் வரச் சொல்லி. நா...... நான் மறந்துபோனன்'' என்றாள். போக முற்பட்ட வித்தியா முகத்தில் கோபம் பொங்க,

''நீ ஒரு அறணைப் பிறப்புத்தானே... .... இனி வெளிக்கிட்டு எப்படிப் போறது நேரம் போட்டுது. சரி பாப்பம்'' என்றவள் நடையில் கோபத்தைக் காட்டினாள்.

''அக்கா அந்த றோஸ் சட்டையை எடுத்துவை வாறன்'' என்ற கீதாவின் குரல் கேட்டு வித்தியா

''ஓ... உனக்கு ஆயிரத்தெட்டு வேலைக்காரர் வேணும்...... என்னால ஏலாது வந்து எடு ...... என்றபடி நடந்து கொண்டிருந்தாள்

''அக்கா எடுத்துத் தாக்காஎன்ர அக்கா எல்ல'' என்று கெஞ்சியபடி திரும்பவும் வாளியை கிணற்றுக்குள் போட்டாள்.

''வா...வா... தாறன்'' என்றபடி நடந்தாள் வித்தியா. வாழையடியில் குடத்தை வைத்து விட்டு ''அம்மா கெதியாய் சாப்பாட்டை செய்யணை.'' என்றபடி வீட்டுக்குள் நுழைந்தாள். அவளைத் தொடர்ந்து வந்த கீதா

''அக்கா அந்த றோஸ் சட்டையை எடுத்துத்தா'' என்றதும் வித்தியா சட்டையை எடுத்துக் கொடுத்ததும் கீதா கிணற்றுப்பக்கம் ஓடினாள். குசினியில் இருந்து முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்தபடி வெளியே வந்தாள் கண்மணி.

''ஏன் இப்படி கஸ்டப்பட வேணும். நான் காணி பூமி நகை, நட்டு ஒன்றும் இல்லாம வந்தனானே! என்னட்ட கிடந்த நகை நட்டை ஒவ்வொண்டா வித்து...சுட்டு இந்தக் காணி பூமியை வேண்டியும் அதாலயும் ஒரு பிரயோசனமும் இல்லாம கிடக்கு. அது மட்டுமே ......கொப்பர் பாத்த சட்டம்பி வேலையையும் விட்டார். அந்த மனுசன் கொழுப்பில செய்த வேலையாலதான் இப்ப நாங்கள் கஸ்ரப்பட வேண்டிக்கிடக்கு''. என்று மனசில இருந்த துயரங்களை கொட்டித் தீர்த்த கண்மணி, முற்றத்து மாமரத்தின் கீழ் அமர்ந்து திண்ணையில் கிடந்த வெற்றிலைத் தட்டத்தை எடுத்து வெத்திலை போட ஆயத்தமாகிறாள்.

''ஆரடி செய்த தப்பு'' என்று கேட்டபடி முற்றத்தில் வந்து நின்ற கணவன் தில்லைநாதனை ஏறிட்டுப் பார்த்த கண்மணி.

''பேந்தாரைச் சொல்லுறன் உங்களைத்தான்.

உங்களின்ரை வேலயால தான் இப்ப நாங்கள் கஞ்சிக் கும் வழியில்லாம கஸ்ரப்பட வேண்டிக் கிடக்கு. உந்த சட்டம்பி வேலையை எப்ப விட்டியள் அப்ப பிடிச்ச சனியன் இன்னும் துலைஞ்ச பாடில்லை'' என்றாள் வெத்திலையை வாயில் போட்டபடி.

''கண்மணி விடியக் காத்தால மனுசனுக்கு விசர்வரப் பண்ணாதை. ஒழுங்கா பாக்கிற வேலையை பார்.''

''நீங்கள் செய்யிறதெல்லாம் சரி, நாங்கள் வாயை திறந்தால்தான் ...... உங்களுக்கு . ...விசர் வாறது ஒரு மனுசன் கொஞ்சமாவது யோசிக்க வேணும் பெண்டில் பிள்ளை குட்டிகளை நினைக்க வேணும். ஒண்டுமில்லாம உப்பிடி பொறுப்பில்லாமல் நடந்தால் மற்றவைக்குக் கோபம்தானே வரும்'' என்ற கண்மணி கோபத்துடன் எழுந்து திண்ணையில் உட்கார்ந்தாள்.

தன் மனைவி கண்மணி மூச்சுவிடாமல் கூறியதைக் கேட்ட தில்லைநாதன் சட்டம்பியாருக்கு தனது மனதில உள்ளதை மனைவி மக்கள் புரிஞ்சு கொள்ளவில்லையே! என்ற தாக்கமும், ஏமாற்றமும். அவர்களுக்கு எப்படி இந்த விடத்தை புரியவைப்பது என்ற தடுமாற்றம் நீண்ட நேரம் வரை சிந்திக்க வைக்கவில்லை.

''கண்மணி... கண்மணி... ''

''ம்......... ம் .........''

''இஞ்சை நான் சொல்லுறதை கொஞ்சம் கேள்''

''என்ன? சொல்லப் போறியள் இண்டைக்கு இருபத்திஞ்சு வருசத்துக்கு மேல... உங்கட சொல்லைத் தானே நான் கேட்டுக் கொண்டிருக்கிறன்... ... ஆனால் எந்தவித பிரயோசனமும் இல்லை.'' என்றவள் தில்லைநாதனை ஆழமாகப் பார்த்தாள். அவளின் அந்தப்பார்வை 'உங்களைப் போல விசரன் ஆர் இருக்கினம்' என்றது போல பட்டது அவருக்கு.

''இஞ்ச நான் சொல்லுறது உனக்கு மட்டுமல்ல இஞ்ச இருக்கிற சனத்துக்கும் தான் விளங்கேல்ல, எல்லாரும் என்னைப் பார்த்து விசரன் ...... விசரன் எண்டு சொல்லுகிறது என்ர காதுக்கு எட்டாமலில்லை .. இருந்தாலும் என்னட்டை ஒரு பழக்கம். என்ர மனச் சாட்சிக்கு எது சரி எண்டு படுகுதோ! அதை ஆற்ற ஆலோசனையும் கேட்காமல செய்து போடுவன் அதால வாற நன்மை தீமைகளை பற்றி நான் பிறகு சிந்திக்கிறதுக்கு விருப்பேல்ல. உந்த அரசாங்கம் எங்கட தமிழச்சனத்துக்குஇப்பசெய்யிற அநியாயத்துக்கு எங்களைப் போல ஆக்கள் அவங்களுக்கு செய்து காட்ட வேணும் எண்டுதான் நான் என்ர வாத்திவேலையை விட்டனான். அது விளங்குமே இந்தச் சனத்துக்கு,''

''எனப்பா நீங்கள் இப்ப வேலையை விட்டியள் எண்டதால அரசாங்கம் தமிழ்ச் சனத்துக்கு அள்ளிக் குடுத்திட்டுதே.''

''டியேய் இப்ப நான் வேலையை விட்டிட்டன் எண்டதால தமிழ்ச் சனத்துக்கு அள்ளிக் குடுக்கேல்ல, ஏன் இந்த சட்டம்பி வேலையை விட்டனான் எண்டதை கொஞ்சம் சிந்திக்க வைக்க வேணுமெண்டுதான் செய்தனான்.'' என்று பெருமையாகக் கூறிக் கொண்ட சட்டம்பியார் மெல்ல நடந்து வந்து திண்ணையில் அமர்ந்தபடி கண்மணியை பார்த்தார்.

''இஞ்சருங்கோ நீங்கள் எப்படித்தான் தலையைப் போட்டு உடைச்சாலும் அதை சிங்கள அரசாங்கம் ஒருபோதும் உணராது பாருங்கோ.''

''கண்மணி அதை இப்ப நினைச்சாலும் என்ர ......, தேகம் ஒருக்கா புல்லரிக்குது. என்ரை கண் முன்னால என்னட்டப் படிச்சதுகள் துடிதுடிச்சு சாகிறதை எப்பிடி என்னால தாங்க முடியும்'' என்றவர் கண்களில்

கண்ணீர் ததும்பி நின்றது.

''உங்கட பள்ளிக்கூடத்துக்குதான் பப்பர் அடிச்சதே உங்க எல்லாப் பள்ளிக்கூடத்துக்கும் தான் அந்தக் கோதாரியில போவாங்கள் அடிச்சவன்கள். உங்க எல்லா வாத்திமாரும் வேலையை விட்டினமே ஏன விடியக்காலத்தால சும்மா சண்டை பிடிக்கிறியள'' என்றாள்.

''அம்மா நாங்கள் போட்டுவாறம்'' என்றபடி நடந்து கொண்டிருந்தார்கள் வித்தியாவும், கீதாவும்.

''சரி போட்டு வாருங்கோ'' என்ற சட்டம்பியார் ''இஞ்சபார் கண்மணி. நான் வேலையை ராஜினாமா செய்யிறது பெரிசில்லை இண்டைக்கு தமிழ்ச் சனங்களின்ர உயிருக்கு எந்தவிதமான பாதுகாப்புமில்லை. அந்த அளவுக்கு நாங்கள் வாழுறம். இந்த நேரத்தில எங்களால செய்யக்கூடிய இப்பிடி எதிர்ப்புகளை செய்ய வேணும். ஊர் திரண்டு எதிர்க்க வேணும். அப்பதான் அரசாங்கம் யோசிக்கும். அது மட்டுமில்ல இதுகளை வெளிநாடுகளுக்கு தெரியப்பண்ண வேணும். அப்பதான் எங்கட தமிழ்ச் சனத்துக்கு விடிவு கிடைக்கும்'' என்றவர் கண்மணியைப் பார்த்து .

''சரி சரி...நேரம் போட்டுது நான் தோட்டத்துக்கு போறன் தேத்தண்ணியைத் தாவன்'' என்றார் அடுக்களைக்குள் நுழைந்த கண்மணி தேநீர் கோப்பையுடன் வந்தாள்.

''ஏனப்பா இப்ப வாத்திமார் காணாதெண்டு எங்கட பள்ளிக்கூடங்களில பெரிய கஸ்ரப்படுகினம் அப்பிடி இருக்கேக்க நீங்களும் ராஜினாமா செய்தால் எங்கட பிள்ளையள் எப்பிடி படிச்சு முன்னுக்கு வாறது?'' என்ற கேள்வியைக் கேட்டு நின்ற கண்மணியைப் பார்த்தார்

''டியேய் பள்ளிக்கூடத்திலதான் படிப்பிக்க வேணுமெண்டு இல்லையடி ஒரு மரத்துச்குக் கீழ இருந்து பிள்ளையளுக்கு பாடம் சொல்லிக் குடுப்பன் அதை இந்த மண்ணுக்கு செய்யிற தொண்டாய் நினைப்பன். உந்த அரசாங்கத்திட்ட கையேந்தி நிக்கமாட்டன். சம்பளமில்லாம இப்ப நான் படிப்பிக்க தயார். இதை இந்த அரசாங்கம் உணர வேணும். இனியும் நான் ஏமாறத் தயாரில்லை. எங்கடை இந்த மண் எங்களை வாழ வைக்கும் நாங்கள் ஏன் உவங்களை நம்பியிருக்க வேணும'' என்றவர் மண்வெட்டியைத் தோளில் வைத்துக் கொண்டு நடந்து கொண்டிருந்தார்.

அவர் போவதை கண்மணி வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள். □□

□ □ □

கெரிலலாப் போராளி எவ்வளவுக்கெவ்வளவு அசௌகரியமாக இருக்கிறானோ, எவ்வளவுக்கெவ்வளவு இயற்கையின் கடுமையை அனுபவித்து வருகிறானோ. அவ்வளவுக் கவ்வளவு வீட்டில் இருப்பதாக உணர்கிறான். அவனது கட்டுப்பாடும் மன உறுதியும் மிக உயர்ந்து காணப்படுகிறது. அவனது பாதுகாப்பு உணர்வு உச்சத்தில் இருக்கிறது. அதே சமயம் அவன் சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரு நாணயத்தை சுண்டிப் போட்டு அர்ஷ்டத்தை நம்புவது போல அபாயத்தை எதிர்கொள்கிறான். அதனால் ஒரு கெரில்லாப் போராளிக்கு மோதலைத் தொடர்ந்து அவன் உயிர் பிழைத்து இருக்கிறானா இல்லையா என்பது முக்கியமில்லாமல் போய்விடுகிறது.

— சேகுவேரா

விழிப்பு இன்றி விடுதலை சாத்திய மில்லை. சமுகத்தில் நிலவும் முரண்பாடுகளை விளங்கிக் கொண்டு அவற்றை மாற்றுவதற் கான வழியில் தாக்கமான செயற்பாட்டில் ஈடுபடும் அளவிற்கான விழிப்பு நிலை மக்க ளிடத்து ஏற்படாதவிடத்து அந்த மக்கள் கூட்டம் தன்னை தளைகளிலிருந்து விடுவித் துக் கொள்வதற்கு அருகதையற்ற ஒரு கூட் டமாகவே விளங்கும். ஒரு விடுதலைப் போராட்டத்தில் பண்பாட்டு எழுச்சி அடை தல் ஓர் முக்கிய கட்டம்.

''இத்தகைய பண்பாட்டு எழுச்சியை ஏற்படுத்துவதில் கலைகள் - முக்கியமாக அரங்கு - சிறப்பான பங்கை வகிக்க முடியும். குறிப்பாக அரங்கு ஏனைய கலைகளைவிட சமூகத்தால் மிக இறுக்கமான முறையில் நிர் ணயிக்கப்படும் ஒன்றாக உள்ளது. பொது மக்களோடு அது கொள்ளும் நெருக்கமான தொடர்பும், தம்பவைப்பதில் அது கொண் டுள்ள கூடிய வலுவுமே இதற்குக் காரண மாக அமைகிறது.'' என்று ஒகஸ்ரா (B) போல் என்ற லத்தின் அமெரிக்க அரங்கச் செயலாளி கூறுகின்றார்.

அரங்கு உண்மையில் ஒரு ஆயுதம். மிக வும் சக்திவாய்ந்த ஆயுதம். இந்தக் கார ணத்தினால் அரங்கைச் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் பயன்படுத்த நாம் பாடு பட வேண்டும். இதே காரணத்திற்காகத் தான் ஒடுக்கு முறையாளர்கள் அரங்கை தமது செல்வாக்கை பொதுமக்கள் மீது திணிக்கும் கருவியாகப் பயன்படுத்தப் பெரு முயற்சி செய்கிறார்கள். தமது மேலாண் மையை மக்கள் மீது செலுத்தும் கருவி யாக அரங்கைப் பாவிப்பதற்காக அரங் கின் சாரத்தையே இவர்கள் மாற்றி விடு கிறார்கள். உண்மையான அரங்கின் ஒரு திரிவுபட்ட வடிவத்தையே எமக்கு இவர் கள் காட்டுகின்றார்கள். நாமும் அதையே உண்மையான அரங்கு என்று நம்பி எம்மை அடிமைப்படுத்த, மந்தைகளாக்க பயன்படுத்தப் படுகின்ற அதே அரங்கையே பயன்படுத்த முயல்கின்றோம். இதுபற்றி ஓரளவுக்கு விளக்கமாகச் சற்றுப் பின்னர் நோக்குவோம்.

உண்மையில் அரங்கு தன் தோற்றத் தில் மக்கள் சுதந்திரமாக திறந்த வெளிக ளில் ஆடிப்பாடும் ஒரு கலையாக இருந்த தாக அரங்க மானிடவியலாளர் கூறுவர். அரங்கு பற்றிய மிகவும் பழமை வாய்ந்த சான்றுகள், புராதன கிரேக்கத்தில், 'தயோனிஸியஸ்' விழாக்களை பல மட்டங் களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்று கூடிப் பங்குபற்றும் பாரிய சனரஞ்சகக் கொண்டாட்டங்களாகவே கூறுகின்றன. ஆரம்பத்தில் அரங்கு கோரஸ், வெகுசனங்கள், - மக்கள் என்பதாகவே இருந்

# நமக்குத் தேவைப்படும் அரங்கு

க. சிதம்பரநாதன்

தது. இந்த அரங்கு அனைவரும் சுயாதீனமாகப் பங்கு பற்றக் கூடிய கொண்டாட்டமாகவே இருந்தது.

பின்னர்வந்த மேற்குடி மக்கள் அரங்கை ஆற்றுபவர்களாகவும், பார்ப்போர்களாகவும் பிரித்தனர். சிலர் மேடையில் ஆற்றுகையில் ஈடுபட, ஏனையோர் அமைதியாக செயல்முனைப்பற்ற நிலையிலே இருந்து பார்ப்போர்களாக ஆக்கப்பட்டனர். இவர்கள் 'பார்வையாளர்கள்' என்று அழைக்கப்பட்டனர். மேடையில் நடப்பதை இவர்கள் கண்மூடித்தனமாக நம்பினர். மேடையில் உள்ள நடிகர்களின் உணர்ச்சிகளுக்கே பார்வையாளர்களும் வசப்பட்டனர். பார்வையாளர்கள் எதுவும் சிந்திப்பதில்லை. வெறும் சடங்களாக ஆக்கப்பட்டனர். ஒடுக்குமுறையாளர்கள் இவ்வாறு மக்களை மந்தைகளாக்கி அவர்கள் மீது தமது கருத்துக்களை திணிக்கும் வகையிலே அரங்கை பயன்படுத்தியதன் மூலம் தம்மை அசாதாரண சிறப்புக்குரிய மனிதர்களாகப் பிரகடனப் படுத்திக் கொண்டனர். மக்கள் சடங்களாகினர்.

இன்று எம் மத்தியில் நிலவுகின்ற அரங்குகளில் பெரும்பாலானவை இத்தகைய அரங்குகள் தான். அரங்கு என்றவுடன் எமது எண்ணத்திற்கு வருபவை யாவை? பெட்டி போல் அடைக்கப்பட்ட மேடை, நடிகர்களையும் பார்வையாளர்களையும் பிரிக்கும் முன்திரை, இருட்டிலே கட்டுப்படுத்தப்பட்ட நிலையிலே பார்வையாளர்கள்...

ஒரு தாக்க வன்மையுள்ள மக்களை எழுச்சி கொள்ள வைக்கின்ற அரங்கே நமக்குத் தேவையானது. கலைப்படைப்பிற்கும் பார்வையாளர்களுக்குமுள்ள தொடர்பு ஒரு இருவழித் தொடர்பாக அமைதல் நமக்குத் தேவைப்படும் அரங்கில் முக்கியமானதாகும். நாம் அடிப்படையில் இரண்டு வித்தியாசமான அரங்குகளைப் பற்றிக் கதைக்கின்றோம், ஒன்று மேலாண்மை செலுத்துகின்ற அரங்கு; மற்றையது பார்வையாளனைத் தளைநீக்கி அவனைச் செயல் முனைப்போனாக எழுச்சி கொள்ள வைக்கின்ற அரங்கு, முன்னையது அறிவை வெறுமனே மாற்றஞ் செய்கிற நடவடிக்கை — ஆற்றுபவர்களிலிருந்து பார்வையாளருக்கு — பின்னையது அறிவைப் பெறுகிற ஒரு நடைமுறை இரண்டும் எதிரெதிரான பணிகளாய் இருத்தல் போலவே, இவ்விரு பணிகளுக்கான நடைமுறையும் எதிரெதிரானதாய் அமைதல் வேண்டும். அதாவது பார்வையாளர் மீது மேலாண்மை செலுத்தி அவர்களைச் செயல் முனைப்பற்ற நிலையில் வைத்திருக்க விரும்புகின்ற அரங்கின் நடைமுறையும் பார்வையாளர்களைத் தளை நீக்கி அவர்களைச் செயல் முனைப்புடையோராக ஆக்க விரும்புகின்ற அரங்கின் நடைமுறையும் வெவ்வேறானவையே. முன்னையது ஒடுக்கு முறையாளர்களுக்கானது; பின்னையது ஒடுக்கப்பட்டவர்களுக்கானது.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் நாம் இன்னமும் முதலாவது வகை அரங்கையே தெரிந்தோ தெரியாமலோ பெருமளவில் பயன்படுத்தி வருகிறோம். இது ஒரு சோகமான நிலையாகும். உண்மையில் இந்த அரங்கை —முதலாவது வகை அரங்கை நாம் எம்மை ஆளவந்த மேற்கத்தியரிடமிருந்தே பெற்றோம். எமது மக்களுக்கு அந்நியமான இந்த அரங்கையே நாம் தொடர்ந்தும் பயன்படுத்துவது உண்மையில் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான ஒரு நடவடிக்கையே. நீண்டகாலம் வெளிநாட்டவரால் பண்பாட்டு ரீதியாகச் சீரழிக்கப்பட்டதால் அடிமை மனப்பான்மையும் பயமும் சுயநலமும் மிகுந்துவிட்ட எமது இனத்திலிருந்து ஏதோ ஒருவகையில் எழுச்சியடைந்துவிட்ட இளைஞர்கள் போராளிகளாக எல்லைகளில் நின்று போர்புரியும் அதேவேளை, எம்மைச் சீரழிக்க, எந்த வகை அரங்கை ஆளவந்த அந்நியன் பயன்படுத்தினானோ அதே

அரங்கையே நாமும் பயன்படுத்தி மக்களை மந்தைகளாக்குவது எல்லைகளில் நின்று போரிடும் போராளிகளுக்கு நாம் செய்யும் துரோக மில்லையா? மந்தைகளாக்கப் படுகின்ற ஒரு மக்கள் கூட்டத்திடமிருந்து எவ்வாறு புதிய போராளிகள் எழமுடியும்; எழ முடியாதே.

மக்களின் மந்தை மனப்பான்மையை நீக்கி எழுச்சி பெற்ற மக்களினமாக ஆக்குவ தற்குத் தேவையான பொருத்தமான அரங்க வடிவங்களை உருவாக்க வேண்டுதல் அவசியமானதாகும். அதாவது மாற்றம் கட்டாய மானது. புதிய வடிவங்கள் உருவாக்கப்பட வேண்டும். இந்த வடிவங்கள் மக்கள் சுயாதீனமாக அந்த நிகழ்ச்சியில் பங்கு பற்றக் கூடிய வகையினதாக, அவர்களை அடக்கி வைக்காததாக இருக்க வேண்டும். பொருத்தமான அரங்க ஆற்றுகைகளில் பங்குபற்று வதால் தளை நீக்கப்பட்ட பார்வையாளன் ஒரு முழுமனிதனாக செயல் முனைப்புள்ள முயற்சிகளில் ஈடுபடுவான். எனவே, அரங்கை மக்களுக்கானதாக்கிக் கொள்ள வேண்டும் மக்கள் அரங்கு உருவாக்கப்பட வேண்டும். □□

# நிமிர்வு

அகிலா பசுபதி

புரட்சியின் பூக்கள் இங்கே பூக்காமல் இல்லை
புத்தொளி வீசிப் பரவாமல் இல்லை
வரட்சியில் தமிழ் மண் நீரின்றி
வாடிக் கிடந்த போதும்......
புரட்சியின் பூக்கள் இங்கே பூக்காமல் இல்லை!

இளந்தளிர்கள் இங்கே துளிர்க்காமல் இல்லை
இளைய தலைமுறை வளராமல் இல்லை
இன்னலில் தமிழ் மண் இடர்ப்பட்டு
இழிவுற்றுக் கிடக்கின்ற போதும்......
இளந்தளிர்கள் இங்கே துளிர்க்காமல் இல்லை!

ஆணிவேர்கள் இங்கே அறுந்து போவது இல்லை
ஆயிரம் ஆயிரமாய் இன்று
ஆலமரத்து விழுதுகள்
அறுந்து விழுகின்ற போதும்......
ஆணிவேர்கள் இங்கே அறுந்து போவது இல்லை!

தமிழன் ஒருநாளும் தலைகுனியப் போவது இல்லை
தங்கத் தமிழன் தளரப் போவதும் இல்லை
தானைத் தலைவனவன்
தரணியில் உள்ள மட்டும்
தமிழன் ஒருநாளும் தலைகுனியப் போவது இல்லை!
□

# சாந்தன் கதைகள் மூன்று

## மூண்டெரியுந் தீயின் மூலப்பொறி

'நான் மனிதன்'

'நீ தமிழன்'

'நான் மனிதன்'

'இல்லை, நீ தமிழன்'

'நான் மனிதன், நான் மனிதன்'

'நீ தமிழன், நீ தமிழன்'

'சரி நான் தமிழன், நான் தமிழன்'

## மண்ணும் முளையும்

மீண்டும் ஊரடங்கு அறிவித்தல். இடம் பெயரச் சொல்லும் எச்சரிக்கைகள்... எந்த நேரமும் ஒரு ஊழி தொடங்கலாம்......

தெருவில் மூட்டை முடிச்சுக்களும் முகத்தில் கவலைகளு மாய்ச் சனங்கள்...... இடையில் ஒரு முச்சில்லு மிதிவண்டி. பயணிகளிருக்கையில் இரண்டு பெண்கள். மருத்துவ மனையால் வீடு திரும்புங்கோலத்தில் ஒரு இளம் பெண். அருகில் துணையாய் ஒரு மூதாட்டி. அவள் அணைப்பில் துணிச் சுருளிற் துயிலும் ஒரு புத்தம் புதுப் பூக்குஞ்சு.

## இளங்கன்று \ இசைவாக்கம்?

பள்ளிப் பக்கம் பிரச்சினை.

'படிப்பும் வேண்டாம் பள்ளியும் வேண்டாம்...... பிள்ளைவந்திடட்டும் கடவுளே......' — பெற்றவர்கள் நேர்ந்தார்கள்.

பொம்மர்களும் ஹெலிகளும் போய்த் தொலைய பிஞ்சுகள் வந்தார்கள். பள்ளியின் வாயிலில் பதட்டமும் பயமுமாய்ப் பார்த்திருந்த வர்கள் பிள்ளையை அணைத்துக் கொண்டார்கள்,

'பயந்திட்டியா ராசா?'

'அம்மா நாலு குண்டுதான் போட்டவங்கள்..... ஒருக்கா ஒரு பொம்மர் பதிஞ்சுது. ஆனா குண்டு போடாம எழும்பி விட்டுது..... அது ஏன் அம்மா?'

□□

# சீமெந்துக் கலவையில் ஓர் கலை வடிவம்

எம். கே. முருகானந்தம்

ஆஜானுபவானான அந்த இளம் வேங்கை நெஞ்சில் குண்டு பட்டுச் சாய்ந்து விட்டான். ஒரு கையில் ''வோக்கி-ரோக்கி'', மறு கையில் துப்பாக்கி.

''தான் சாய்ந்தாலும் தனது துப்பாக்கி தவறிவிடக்கூடாது, அதை இழந்து விடக் கூடாது. அதை ஏந்த இன்னுமொரு போராளி தொடர்வான்'' என்ற நம்பிக்கை துப்பாக்கியை ஏந்தி நிற்கும் வலக்கரத்தின் உறுதியான பிடியில் தெரிகிறது. கழுத்தில் சயனைட் குப்பி கம்பீரமாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது.

இறுதி மூச்சுப் பிரியப் போகும் அந்த நேரத்திலும் அவனது முகத்தில் சோர்வோ, கவலையோ, பயமோ கிஞ்சித்தேனும் கிடையாது; மாறாக துயர் மிகுந்த அக் கணத்திலும் அமைதியும், திருப்தியும் அவன் முகத்தில் சுடர் விட்டு ஒளிர்கிறது.

தாய்த் திருநாட்டிற்கான தனது பங்களிப்புப் பணியைச் செவ்வனே செய்து விட்ட மனநிறைவினால் மலர்ந்த திருப்பதி.

அவனது முகம் காட்டும் பாவங்களிலிருந்து வேறுபட்ட உணர்வுகளைக் காட்டுகிறது அவனது தலையைத் தூக்கி தனது மடியில் கிடத்தி ஆசுவாசப்படுத்துகின்ற இன்னுமொரு போராளியின் முகம்.

இத்தனை நாளும் தன்னோடு களத்திலும் முகாமிலும் கூடித்திரிந்த, ஒன்று சேர்ந்து உணவு உண்ட, துன்பத்திலும் இன்பத்திலும் கைகோர்த்து வந்த சக போராளி சாய்ந்து விட்டானே என்ற ஏக்கமும் கவலையும் ஒரு புறம்; காயம் பட்டு வீழ்ந்து விட்ட அவனை வேதனையில் துடிக்க விடக் கூடாது, தனிமையில் ஏங்க விடக் கூடாது, அவனை அன்போடு ஆசுவாசப்படுத்தி அவனுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும் என்ற பாச உணர்வு இன்னொரு புறம்.

இத்தனை உணர்வுகளையும் துல்லியமாகக் காட்டி, எமது உணர்வலைகளை வீணையின் ரீங்காரம் போல் சிலிர்க்க வைக்கின்றன சீமேந்துக் கலவையிலான இந்தச் சிலைகள்.

'கல்லிலே கலை வண்ணம் கண்டவன் தமிழன்' என்கிறார்கள். ஆனால் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில், எமது சூழலில் கற்பாறைகள் இல்லாத காரணத்தினாலோ என்னவோ, கோயில் விக்கிரகங்கள் கூட தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்படுகின்ற நிலையே இருந்தது.

போராளி சிவகுமாரன், சங்கிலிமன்னன், ஔவை, வள்ளுவன், சந்தமுருகேச

னார், சதாவதானி நா. கதிர்வேற்பிள்ளை போன்ற சிலரின் பிரதிமைச் சிலைகள் அவ்வப்போது எமது கலைஞர்களால் உருவாக்கப்பட்டிருப்பது உண்மைதான்.

ஆனால் பல உருவங்கள் சேர்ந்த ஒரு நிகழ்வையோ, உணர்வு நிலையையோ, கருவாகக் கொண்ட பிரமாண்டமான சிலைத் தொகுதிக் கலைப்படைப்பு எதுவும் இதுவரை எமது நாட்டில் அமையப் பெறவில்லை.

சென்னை மெரீனாக் கடற்கரையில் உள்ள தொழிலாளர் சிலை இத்தகைய ஒன்று. தமிழ் நாட்டிற்குச் சென்ற பலர் இதனை நேரில் கண்டு இரசித்திருக்கக் கூடும். அல்லது தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளிலோ, திரைப் படங்களிலோ பார்த்திருக்கக் கூடும்.

அற்புதமான அந்தச் சிலையை சிருஷ்டித்தவர், தமிழ் நாடு நுண்கலைக் கல்லூரியின் முன்னை நாள் அதிபரான ரோய் சௌத்திரி என்ற கலைஞன்.

அச்சிலைக்கு நிகராக, என் பார்வையில் அதைவிடச் சிறந்ததான போராளிகள் சிலையை உருவாக்கி இருப்பவர் எமது நாட்டுக் கலைஞரான ரமணி.

வல்வெட்டித்துறை தீருவில் மைதானத்தில் மாவீரர் துயில் கொள்ளும் பள்ளியின் வாசலிலே அமைந்திருக்கிறது இந்தப் போராளிகள் சிலை.

புதிய நவீன பாணி 'ரொக்கற் லோஞ்சரை'தோளில் சுமந்து' அதன் தூரதிருஷ்டிக் கண்ணாடி ஊடாக இலக்குப் பார்த்து குண்டுகளை ஏவத் தயாராகிறார் மற்றுமொரு போராளி. தூரத்தே இருக்கும் இலக்கின் மீது குறிவைத்து ஊன்றிய அவரது கூரிய பார்வை. பார்வையாளர்களையும் ஊடுருவிச் செல்வது போன்ற நுணுக்கமான வாய்பைக் கொண்டது. மைக்கல் அஞ்சலோவின் டேவிற். சிலையின் கண்பார்வைக் கூர்மையை பலரும் விதந்து போற்றுவது இத்தருணத்தில் ஞாபகத்திற்கு வருகிறது. கையில் கவண் ஏந்தி நிற்கும் டேவிற் தூரத்தே மலைபோல் உயர்ந்து நிற்கும் கோலியத்தின் நெற்றிப்பொட்டை மானசீகமாகக் குறிவைத்துத் தனது கூர்விழியை தொலைவில் பதிய வைத்திருப்பது போல் நுணுக்கமாக வடித்திருக்கிறார் மைக்கல் அஞ்சலோ.

மடித்துக் கட்டிய பின்னலுடன், சீருடை தரித்து, துப்பாக்கியை கையில் ஏந்தி, விழிப்புடன், 'சென்றிப்பொயின்டி'ல், காவல் நிற்பது ஒரு பெண் போராளி. வட்டமான அவள் முகமும், உருண்டையான மூக்கும் சுருங்கிய நெற்றியும் இது எம்மவள் - தமிழ்ப் பெண் என்பதைப் பறை சாற்றி நிற்கின்றன.

நாற்புறமும் பார்த்துநிற்கும் முற்கூறிய ஐந்து சிலைகளுக்கும் மத்தியில், நடுநாயகமாக ஒரு கையில் அனாயாசமாக துப்பாக்கியை ஏந்திக் கொண்டு, மறுகையால் வெற்றிக் கொடியை நிமிர்த்தி ஏற்றும் ஆண் போராளியும், அவனுக்கு உதவியாக கரங்கொடுத்து கொடியை ஏற்றும் பெண் போராளியும் நிற்கிறார்கள்.

எமது போரட்டத்திலும், அது அடைய இருக்கும் இறுதி வெற்றியிலும் ஆண் போராளிகளுக்குச் சரிநிகராகப் பெண் போராளிகளும் இணைந்து வருவதை இது உணர்த்துகிறது.

வெற்றிக் கொடியை ஏற்றும் அத்தருணத்தில் அவர்கள் அடையும் பெருமையும் ஆனந்தமும், பூரிப்பும் முகத்தில் பளிச்சிட்டு பார்வையாளர்களையும் தொற்றிவிடுகின்றது.

கொடியை ஏற்றும் அந்த மூன்று கரங்களின் இலாவகமும், உறுதியும் ஒவ்வொரு விரல்களிலும், அந்த விரல்களில் புடைத்து நிற்கும் தசை நார்களிலும், நாடி நரம்புகளிலும் உயிர்த் துடிப்புடன் வெளித் தெரிகின்றன.

புகழ் பெற்ற மோனாலிசாவின் ஓவியத்தில் அந்தப் பெண்ணின் சோகம் கலந்த புன்னகையை ரசிப்பவர்கள் பலர். ஆனால் அதைவிட, அந்தப் பெண்ணின் கைவிரல்களின் அங்க நேர்த்தியையும், அதன் வெளிப்பாட்டுத் திறனையும் மெச்சுபவர்கள் வேறு சிலர்.

ஓவியத்தில் வரையப்பட்ட அந்த அங்க நேர்த்திக்கு இணையான கலையழகும் உடற்கூற்றியல் நுணுக்கமும் கொண்ட இவ்விரல்களின் சிற்ப நேர்த்தி காண்பவர்களை அசர வைக்கும்.

இவை எல்லாவற்றையும் விட, பார்வையாளர்களை அந்தச் சிலைகளுடன் உணர்வு பூர்வமாக ஒன்றச் செய்து, ஒரு வித சோக உணர்வை தூண்டி எழுப்புவது சாய்ந்து விட்ட அந்தப் போராளியின் வலது கையும், வலது காலும் தான், அவற்றை சிலைகள் அமைக்கப்பட்ட பீடத்தில் இருந்து வழுகி, வெளியே சரிந்து வீழ்வதைப் போல் அமைத்திருக்கிறார். இது பார்ப்பவர்கள் மனதைப் பதற வைக்கிறது. ஓடிச்சென்று அவனது கால்களைப் பற்றி வீழ்ந்து விடாது தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. அது ஒரு சிலை என்பதை ஒரு கணம் மறந்து விடச் செய்கிறது. இந்த ஒரு அம்சமே அக் கலைஞனின் வெற்றிக்கு சான்றாக இருக்கிறது.

ஏழு சிலைகளில் ஐந்து சிலைகள் சாலையைப் பார்த்து கிழக்கை நோக்கி (வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்கு) அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிகாலையில் இளஞ்சூரியனின் தங்கக்கதிர்கள், பாசிகலந்த வெண்கல வர்ணக் கலவையில் உருவான சிலைகளிலும் பட்டுத் தெறிக்கும் போது உலோகமாக ஒளிர்கிறது.

சிலைகள் அமைந்திருக்கும் பீடம் அளவிற்கு மீறிப் பெரிதாகத் தெரிவதால் சிலைகளின் முக்கியத்துவம் குறைந்தது போல் தோற்றமளிக்கிறது, அத்துடன் சிலைகளுக்கிடையேயான இடைவெளி அதிகமாகத் தெரிவதால் இவை தனித்தனிச் சிலைகளா என்ற உணர்வும் ஏற்படுகிறது. அவை இன்னமும் நெருக்கமாக அமைக்கப்பட்டிருந்தால் நெருங்கிப் பிணைந்த பல்வேறு கீற்றுக்களைக் கொண்ட ஒரு நிகழ்வின் வெளிப்பாடு என்ற உணர்வு மேலோங்கியிருக்கும் என்பதையும் குறிப்பிடலாம்.

சுதந்திரப் போராட்டம் நடந்த பல்வேறு நாடுகளிலும் இத்தகைய சிலைகள் காணப்படக்கூடும் ஆயினும் அவற்றைக் காணும் பாக்கியம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை மலேசிய நாட்டில் இத்தகைய ஒரு சிலை இருப்பதாக அறிகிறோம். வீழ்ந்து கிடக்கும் பல மனித உடல்களின் நடுவே துப்பாக்கியை ஏந்திய போராளி நிற்பதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதாம். இது மனித அவலங்களின் மத்தியிலும் போராட்டம் தொடர்வதைக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

ஆனால் இந்தப் போராளிகள் சிலைகள் ஆயுதப் போராட்டத்தின் பரிமாண வளர்ச்சியை காட்டுவதுடன் நின்று விடாது, இறுதி வெற்றியை அது அடைந்துவிடப் போவதைக் கட்டியங் கூறுவது போல், வெற்றிப் பூரிப்பில் நிற்கும் போராளிகள் கைகளில் சுதந்திரக்கொடி நிமிர்ந்து நிற்பதைச் சித்தரிக்கிறது.

எதிர்காலத்தில் நிகழ இருக்கும் சுபீட்சங்களைக் கற்பனையில் கண்டு மகிழ்ந்து

கலை இலக்கிய வடிவங்களாக வார்த்தெடுத்து மக்களையும் உற்சாகப்படுத்துவது சமூக உணர்வு கொண்ட முதற் தரக் கலைஞர்களாலேயே செய்யக் கூடியது.

''ஆடுவோமே - பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று'' (ஆடுவோமே) பாரதி இப்பாடலைப் பாடிய போது இந்தியாவில் சுதந்திரக் காற்று வீசவுமில்லை. பாரதி அதைச் சுவாசிக்கவும் இல்லை. ஆனால் விரைவிலேயே இந்தியா சுதந்திரம் பெற்று விட்டது. இப்பொழுது ரமணியும் சிலை வடிவில் நிற்கும் போராளிகள் கையில் சுதந்திரக் கொடியைக் கொடுத்து விட்டார். நாமும் விரைவில் சுதந்திரத்தை அடைந்து விடுவோம் என்பதற்கான நல்ல சகுனமாக இதைக் கொள்ளலாம்.

இச்சிலைகளை ஒரு ஒழுங்கான வடிவமைப்பில் ஆக்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. வெளிப்புறத்தில் அகன்று பரந்து படிப்படியாக ஒடுங்கி உயர்ந்து மத்தியில் குத்தென நிற்கும் கொடிக்கம்பத்தின் முனைவரை தேரின் அமைப்புப் போன்ற முக்கோண வடிவமைப்பைக் கொண்டிருப்பது சிறப்புக்குரியது.

இது ரமணியின் முதற் சிலை என்று கூறமுடியாது. அடக்கு முறையாளர்களின் கையில் அகப்படக்கூடாது என்பதற்காகத் தன்னுயிரை நீத்துக் கொண்ட தியாகி சிவகுமாரனின் சிலையை 1975களில் வடித்தவர் ரமணி தான். அடக்கு முறையாளர்களால் சிலை உடைக்கப்பட்ட போது 1983ல் அதை மீள அமைத்ததும் அவர் தான். மீண்டும் உடைக்கப்பட்ட சிலையை இப்பொழுது வேறொரு சிற்பி உருவாக்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

எமது போராட்டம் முற்றுப் பெற்று நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் போது இந்தப் போராளிகள் சிலை எமது சுதந்திரப் போராட்டத்தின் நினைவுச் சின்னமாகப் பேணப்படுவது திண்ணம். அமெரிக்க நாட்டின் தேசிய சின்னமாக நீதி தேவதைச் சிலை மதிக்கப்படுவது போல இதுவே ஈழத்தின் தேசிய சின்னமாகக் கணிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மைக்கல் அஞ்சலோவின் புகழ் பெற்ற 'பியட்டா' சிலை குறித்து வஸாரி குறிப்பிட்டது போராளிகள் சிலையை வடித்த ரமணிக்கும் பொருந்தும் என நம்புகிறேன்.

''அழகிய பாவமும், அங்கங்களின் இசைவும், உடலமைப்பும், நாடி நரம்புகளின் நுணுக்கமான சித்திரிப்பும் மிகுந்த தொரு வடிவைக் குறிகிய காலத்தில் செய்து முடித்த கலைஞனின் ஆற்றலும், விரைவும் நம்மை வியப்புற வைக்கின்றன.

இயற்கையால் கூட உருவாக்க இயலாத தசைக் கோளங்களை வெறும் சலவைக் கல்லில் அவன் உருவேற்றியதை அற்புதம் என்று சொல்லாது வேறு எங்ஙனம் குறிப்பிடுவது''

அது சலவைக் கல்லினால் ஆனது. இது சீமெந்துக் கலவையினால் ஆனது என்பதே வேறுபாடு.

''நான் இப்பொழுது உருவகங்களின் நுணுக்கங்களிலோ தனிமனித சிறப்பியல்புகளை வடிப்பதிலோ ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. பருமஅளவு, பொருண்மை, வெளி, மேற்புற உறுப்பிழைநயம் மனக்கண் தோற்றம் ஆகியவற்றிலேயே கவனம் செலுத்துகிறேன்.

அது கடலின் அலைகளைக் கண்களால் ரசிப்பது போல, காற்றின் அசைவைச் செவிமடுப்பது போல, இயற்கையின் இருதயத் துடிப்பை உணர்வது போல

இருக்க வேண்டும்.''

என்று நவீன சிற்பம் பற்றிக் கூறுகிறார் தமிழ் நாட்டின் இன்றைய காலகட்டத்தின் சிறந்த சிற்பியும், தமிழ்நாட்டு நுண்கலைக் கல்லூரியின் அதிபருமான பேராசிரியர் எஸ், தனபால் அவர்கள்.

தனபாலின் 'நிற்கும் உருவம்' என்ற புகழ் பெற்ற சிற்பத்தில் அடிப்படைச்சக திகளைத் தேடும் கலைஞனின் உள்ளார்ந்த நோக்கும், பரப்பளவைச் சரியான முறையில் பகிர்ந்து உபயோகிக்கும் பாங்கும், தெளிவாகின்றன. அச்சிலை தனித்துநிற்பது போல் காட்சியளிக்காது சுற்றிவர இருக்கும் திறந்த வெளியுடன் இணைந்து இயற்கைச் சூழலுடன் சங்கமித் துவிடும் தன்மையைக் கொண்டுள்ளது.

ரமணியின் போராளிகள் சிலை நவீன பாணியிலானது அல்லத்தான். பிரதிமை வடிவச் சிலைகளாக இருந்த போதும் குறியீட்டு முறையில் பலவற்றைச் சுட்டிக் காட்ட அவர் முற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. கரடுமுரடான கற்கள் நிறைந்த மேற் தளத்தில் போராளிகள் சிலைகளை அமைத்திருத்தல் போராட்டத்தின் பரிமாண வளர்ச்சி போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதில் நவீன பாணிச் சிற்பத்திற்குச் செல்ல விழைகிற அவரது அவாவினையும் உணர முடிகிறது.

'மாவீரர் துயில் கொள்ளும் பள்ளி' மாவீரர் பூங்காவாக' உரு மாறும் நேரத்தில் நவீன பாணிச் சிற்பமொன் றையும் அமைக்க விரும்பும் அவரது வேட் கையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

ஓவியராக இருந்து சிற்பியாக மலர்ந் துள்ள அவரிடமிருந்து அத்தகைய உணர்வுச் சிற்பமொன்றை நாம் நிச்சயம் எதிர்பார்க்கலாம். □□

## அருவி

''அச்சு இதழ்கள் மீதான நெருக்கடி காரணமாக தேங்கிக் கிடக்கும் படைப் பாற்றலுக்கான களமின்மையைக் கருத்தில் கொண்டு இபபோது வெளியிடப் படுகின்ற கையெழுத்து இதழ்கள் தொடர்ந்தும் வெளிவருவதற்கான ஊக்கத் தினையும் உதவியினையும் விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம் வழங் கும்'' என்ற அறிவிப்பானது கலைஞர்களை உற்சாகப்படுத்தியது.

இதன் முதற் பேறாக 1971ம் ஆண்டிலிருந்து இன்று வரை தொடர்ந்து வெளி வந்து கொண்டிருக்கும் அரியாலை கலை மகள் சன சமூக நிலைய வெளியீடான 'அறிவொளிக்கலை' எனும் கையெழுத்து இதழ்கள் சிலவற்றிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட விடயங்கள் அடங்கிய தொகுப்பு ''அருவி' என்ற பெயருடன் வெளிவந்துள்ளது.

அருவி என்ற பெயரில் இத்தொகுப்பு வருவது மட்டுமன்றி, இக்காலத்தை மையப்படுத்தி எழுதப்படும் கையெழுத்துத் தொடர் இதழாயும் 'அருவி' வரவிக்கிறது.

# வெள்ளையம்மா

மேஜர் பாரதி

கருக்கல் பொழுது. அப்படித்தான் அந்த நேரத்தை எல்லாரும் சொல்லுவினம். நல்ல வெயில் காலம். வல்லை றோட்டின் இரண்டு பக்கங்களிலும் விரிந்து பரந்து கிடந்தன வயல் துண்டுகள். சில வயல்துண்டுகள் உழுது கிடந்தன. சில அப்படி அப்படியே காய்ந்து போய் இருந்தன.

காய்ந்து வரண்டு போய்க் கிடந்த அந்த வயல் துண்டுகளைப் பார்க்க, வெள்ளை அம்மாவிற்குப் பரிதாபமாக இருந்தது.

''என்ன செய்ய நெடுக ஒரே மாதிரியாக இருக்க ஏலுமே. கதிரைத் தள்ளப் போகிற நெல்லுகள் பச்சையாக நின்று தலையசைக்கிற காணத்திலை இந்த வயல்களைப் பார்க்க நல்லாய்த்தான் இருக்கும் இப்ப என்னெடா எண்டால் காய்ந்து வரண்டு...... அதுக்கென்ன செய்யிறது. இப்பிடித்தான் எல்லாம். நல்லதும் கெட்டதும் மாறி மாறி வருகிறமாதிரி...... ஏன் இப்ப என்ன இதைப் பாக்க அருவருப்பாகவே கிடக்குது. எல்லாம் பாக்கிற கண்ணுகளைப் பொறுத்ததுதான்'' என தன்மனதுக்குள் சொன்னாள்.

வெள்ளை அம்மா மினி பஸ்ஸின் யன்னலோரமாக அமர்ந்திருக்கிறாள். அவளுக்கு எல்லாம் எதிர்த் திசையிலை ஓடுவது போல இருந்தது. அப்பிடித்தான் அவளின் நினைவுகளும் மாறி மாறி வருகின்றன.

இப்பிடித்தான் வெள்ளைஅம்மா முந்தியும். மினி பஸ்ஸிலை தன்ரை சொந்த அலுவல்களுக்காக என்றில்லாமல் வேற தேவைகளுக்காகப் போயிருக்கிறாள். அதெல்லாம் அவளுடைய பிள்ளை மஞ்சுவோடைதான் மற்றப்படி வெள்ளை அம்மாவுக்குத் தெரிந்ததெல்லாம் அல்வாயின் ஒற்றையடிப் பாதைகளும் ஊர்ச்சந்தையும் சங்கக்கடையும்தான். இப்ப வெள்ளை அம்மா அப்பிடி இல்லை. எந்த இடத்திற்

கெண்டாலும் தேவை யானவர்கள் கூப்பிடும் போது அவள் போய் விடுவாள்.

அண்டைக்கும் அப்பி டித்தான். இரண்டுகிழமைக ளாக ஆஸ்பத்திரியிலை நிண்டு தன்ரை கடமைக ளைச் செய்து போட்டு மனத் திருப்தியுடன் 'வீட்டை ஒருக்கால் பாத் திட்டு வருவம்' எண்டுதான் போகிறாள்.

''எப்பிடி இருந்த நான் எப்பிடி எல்லாம் மாறி இருக்கிறன். எல்லாம் என்ரை பிள்ளைக்காகத் தான். இனி நான் உயி ரோடை இருக்கிற காலம் வரைக்கும் என்ரை பிள்ளை எதை விரும்பிச் செய்யு தோ அதைத்தான் நானும் செய்ய வேணும். இரவோ பகலோ என்ன கஸ்ரம் வந்தாலும் இனி நான் அப்பிடித்தான் இருப்பன்'' வேதனையும் துன்பமும் வெள்ளைஅம்மாவை முட்டி மோதினாலும் அவற்றிற் கூடாகவும் அவள் உறுதி எடுத்துக் கொள்கிறாள்.

உறுதி எடுத்துக் கொண்ட வெள்ளைஅம்மா தன்னையும் அறியாமல் 'சிற்றில்' நிமிர்ந்து உட்காரு கிறாள். உடைந்து போயி ருந்த அந்த மினிபஸ் கண் ணாடியை மெதுவாகத் திறந்து வெள்ளைஅம்மா வெளியே தூரப் பார்க் கிறாள். நினைவுகள் அவளை எட்டக் கொண்டு போயின. அவைகளுக்கு துயரத்தின் தன்மைகள் விளங்குவதில்லைப் போ லும். வெள்ளைஅம்மாவை அடிக்கடி அவை துன்புறுத் துவது வழமையாகி விட்டது.

□ □ □

1970 களாயிருக்கும்.

வெள்ளைஅம்மாவிற்கு மூன்றுபிள்ளைகள். இரண்டு ஆண்களும், கடைக்குட்டி யாய் செல்லமாய் மஞ்சுவும் தான் அவர்கள். மூன்று பிள்ளைகளும், வெள்ளை அம்மாவும் அவளின் கண வனுமாக சந்தோஷமாய்த் தான் இருந்தது அந்தக் குடும்பம். பிள்ளைகள் படிக்க வேணும். அவர் களின் வாழ்வு நன்றாக இருக்க வேணும் என்று தான் தந்தை வெயில் மழை என்றில்லாது உழைத் தார் பிள்ளைகள் வீட்டில இல்லாத நேரம் இருவரும் ஆறுதலாக வீட்டு வேப்ப மரத்தின் கீழ் இருந்து பிள்ளைகள் பற்றி கதைத்து மகிழ்ந்தார்கள்.

அந்தச் சந்தோஷமான நிகழ்வுகள் கனகாலம் நீடிக்கவில்லை. அப்போது மஞ்சுவுக்கு நாலு வயது. அண்ணன்மாருக்கு6வயதும் $7\frac{1}{2}$ வயதும் ஆகிவிட்டன. இந்த எதிர்பார்ப்புக்கள் எதையுமே காணாது கெதி யாகவே போய்விட்டார் தந்தை. கணவனின் மறைவு வெள்ளைஅம்மாவை அதி கமாகத் தாக்கினாலும் கவலைப்பட்டுக் கொண்டே காலத்தைப் போக்க முடியு மா? அப்படியென்றால் பிள்ளைகளின் வாழ்வு என்னவாகும்? அவர்களை வளர்க்க வெள்ளைஅம்மா உழைத்துத்தானே ஆக வேணும்.

காலையில் எழுந்து சாப்பாடு செய்தல், வீடு கூட்டுதல், பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புதல், சமை யல் செய்தல் என வீட்டைச் சுற்றி இருந்த வெள்ளை அம்மாவின் உலகம் இப் போது அப்படியல்ல. வயல் விதைக்க வேணும். அதற் குரிய அத்தனை வேலை களையும்அவள்தான்செய்ய வேணும். தோட்டத்தில் பயிர்வைக்க வேணும். குத்தகைப்பணம் கட்ட வேணும் மொத்தத்தில் அவளுக்குத் தொகையான வேலைகள். வெள்ளை அம்மாவின் பிள்ளைகளோ அவள் மேல் உயிர் ஏனென் றால் அவர்களுக்கு அம்மா வும் அப்பாவும் அவள் தானே. வயிற்றுப்பசிக்கு பச்சைத்தண்ணீரை அவள் கொடுத்தாலும் அதில் அவளின் இரத்தமல்லவா கலந்திருந்தது.

சின்னச்சின்ன வேலை களை வெள்ளைஅம்மா விற்கு அவர்கள் ஓடி ஓடிச் செய்தார்கள். அவர்கள்

செய்கிற வேலைகள் அவளின் வேலைப் பழுவில் பெரிய மாற்றத்தைச் செய்யா விட்டாலும் அதில் வெள்ளைஅம்மாவுக்கும் ஒரு பரம திருப்தி. ஒரு விதமாக வீடும் தோட்டமும் வயலுமாக வெள்ளை அம்மாவும், பள்ளிக்கூடமும் வேலைகளுமாக பிள்ளைகளும். அவர்களின் காலம்ஒருவாறு ஓடியது. யாரிடமும் வெள்ளைஅம்மா அவர்களைக் கையேந்த விடவில்லை. அம்மா பிள்ளைகளுக்கு சுதந்திரம் கொடுத்திருந்தாள். மற்ற அம்மாக்களைப் போல அவள் அவர்களை எதற்கும் கட்டுப்படுத்தவில்லை.

வேலை நெருக்கடிகளில் காலம் போனதை அவர்கள் யாரும் கவனிக்கவில்லை.

மஞ்சு 'வளர்ந்து' விட்டான் உடலிலும் உள்ளத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டன. அண்ணனவை மஞ்சுவுக்கு மேலே படித்துக் கொண்டிருந்தார்கள் மஞ்சு உலகத்தைப் பார்த்தாள். சமூகத்தைப்பார்த்தாள். தன்னைச்சுற்றி நடப்பவைகள் ஒவ்வொன்றையும் கூர்மையாகக் கவனித்தாள்.

மஞ்சு பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். தங்களது வாழ்க்கையில் மாறுதல்கள் ஏற்பட்டதை மஞ்சு புரிந்து கொண்டாள். வெள்ளை அம்மா சுதந்திரம் கொடுத்தாலும் வெளியில் சுதந்திரம் இல்லை என்பதை உணர்ந்து கொண்டாள்.

மஞ்சு 'ரியூசனு'க்குப் போகிறவள். இரவு வகுப்பு முடிந்து வந்து எல்லோரும் 'பஸ்'ஸிற்கு நிற்பார்கள். அப்போ கூட்டங்களாக பிள்ளைகள் சேர்ந்து பகிடி விட்டுச் சிரிப்பார்கள். இதைப்பார்த்து கொஞ்சம் வயதானவர்களுக்கு குமட்டிக் கொண்டு வரும். எரிச்சல் எரிச்சலாக இருக்கும். ஒரு மாதிரி முறைத்துப் பார்ப்பார்கள். இவர்களோ எதையும் கவனிக்காதவர் போல் இருப்பார்கள். இரவு நேரம் எண்டாலும் ஒரே கும்மாளம்தான். கொஞ்சக்காலம் இப்பிடித்தான்.

பிறகு ......

பிறகென்ன...... தூரத்திலை பெரியவாகனம் இரைந்து கேட்கும். இப்ப ஏன் சோலி என்று பெரியவர்கள் இல்லை எல்லாம் இளசுகள்தான் சிரிப்பொலிகள் நன்றாகக் குறைந்து விட்டன அந்த 'பஸ் ஸ்ராண்'டில் நிக்கிற 'சைக்கிள்'கள் எல்லாம் பறந்து விடும். 'பஸ்'ஸிக்கு நிக்கிறவை மட்டும் ஒண்டும் செய்யேலாமல்...... அப்படியே ஒன்றாகக் குவிந்து நிற்பார்கள். சத்தம் கிட்டக் கேக்கும். மூன்று அல்லது நான்கு வாகனங்கள் நிரையாய் வரும். பார்க்கப்பயமாய் இருக்கும். எல்லாம் ஒரே நிறமாக..... வாகனங்கள் இரண்டு தடவை பஸ் ஸ்ராண்டை பெரிய சத்தத்துடன் சுத்திவிட்டு உறுமலுடன் பெண்களின் பக்கமாய் வந்து நிற்கும். எல்லோருடைய இதயமும் என்றுமில்லாதவாறு வேகமாய் அடிக்கும். எல்லோரும் விறைத்தபடி ஆடாது அசையாது அப்படி அப்படியே.. துப்பாக்கி மனிதர்கள் குதிக்கும் சத்தத்தில் எல்லோரது மூச்சும் அடங்கி விடும் அத்தனை உதடுகளும் ஒரு வசனத்தை உச்சரிக்கும் ''கடவுளே 'பஸ்'கெதியாவர வேணும்'' என்பதே அது. சில நேரங்களில் இவர்களின் வகுப்பு மாணவர்கள் அந்த வாகனத்துள் ஏற்றப்படுவார்கள். பெண்பிள்ளைகளைச் சுற்றி துப்பாக்கி வேலி அமைக்கப்பட்டிருக்கும். வெளியே ஒன்றுமே தெரியாது. புரியாத பாஷையில் ஏதோ சொல்வார்கள். சிறிது நேரத்தின் பின் செல்வார்கள். ஒவ்வொரு நாளும் இப்படித்தான் பயந்தபடி இரவு சாப்பிடும் போதுகளில் அவள் இவையெல்லாவற்றையும் வெள்ளையம்மாவிற்குச் சொல்லி இருக்கிறாள்.

கொஞ்சக்காலத்தில் மஞ்சுவிற்கு 'ரியூசனே' வேண்டாமென்றாகிப் போனது.

''நான் பள்ளிக்கூடத்திலை கவனமாய்ப்படிப்

பன்'' என்று சண்டை பிடித்தாள். ஒரு மாதிரியாக 'ரியூசனு'க்குப் போகாமல் நிற்க வெள்ளை அம்மா அனுமதி கொடுத்து விட்டாள். இப்ப மஞ்சு பள்ளிக்கூடம் மட்டும்தான்.

சில மாதங்கள்தான் சென்றன.

வாகனங்கள் பள்ளிக்கூடம் வந்து சென்றன. இந்த நிகழ்வுகளுக்கெல்லாம் மஞ்சுவுக்குக் காரணம் தெரியாது. அறிய வேண்டும் என்று விருப்பம் பள்ளிக்கூடத்தில் சிநேகிதிகளிடம் கேட்டாள். பெரிதாக ஒருவரும் இவளது கேள்வியை அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் மஞ்சுவிற்கென்று இரண்டு பேர் கிடைத்துவிட்டார்கள். அவர்களும் மஞ்சுவைப் போலத்தான். எல்லோருமாக விடை தேடினார்கள். நின்றவர் போனவர் எல்லோரையும் கேட்டார்கள். நீண்ட காலமாக விடை தேடிக் கொண்டிருந்தார்கள்.

தேடிய போது துண்டுப் பிரசுரங்கள் கிடைத்தன. புத்தகங்கள் கிடைத்தன. விடை தெரிவது போல இருக்கும். இடையில் சந்தேகங்கள் எழுந்து நிற்கும். சந்தேகங்களை தெளிவுபடுத்த இன்னும் தேடினார்கள். விளக்கக் கூட்டங்களுக்குப் போனார்கள். அவர்களில், முகங்களில எதையோ அறிந்து கொண்ட தெளிவு இருந்தது.

இவை எதையும் மஞ்சு வெள்ளை அம்மாவிற்கு மறைக்கவில்லை. கேள்வி கேட்பாள். வெள்ளை அம்மாவிற்கு ஒண்டும் சொல்ல முடியாது. பிறகு தானே விளக்கங் கொடுப்பாள் வெள்ளை அம்மாவிற்கு ஒரு விதமாய் என்னவோ மாதிரி இருக்கும். முகத்தில் திடீரென ஒரு மாற்றம் இருக்கும். ஆனாலும் அவள வெளிக்காட்ட மாட்டாள். வெள்ளை அம்மாவின் செல்லப் பிள்ளை அவள். வெள்ளை அம்மாவின் முகம் மாறுவதை அவள் தாங்க மாட்டாள். வெள்ளை அம்மா பேசாமல் இருந்துவிடுவாள். அண்ணன்மார் கண்டிப்பார்கள். ஆனாலும் அவ்வளவாக இல்லை. ஒரே ஒரு அன்புத்தங்கை தானே அவள்.

இப்ப மஞ்சுவிற்குப் பூரணமாக விடை தெரியும். போராட வேணும் அப்ப பெண்கள் செய்யக்கூடியவையை மஞ்சுவும் செய்தாள். ஊர்வலங்கள் உண்ணாவிரதங்களுக்குச் சென்றாள். பெண்களை அணிதிரட்டி அவர்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினாள். இவர்கள் மூலம் உற்பத்தி வேலைகளில் பங்கேற்றாள். காவலரண்களுக்கு அருகில் நின்று முதலுதவி செய்தாள். ஊர்வலங்களிற்கும் உண்ணாவிரதங்களுக்கும் இன்னும் சில வேலைகளுக்கும் வெள்ளை அம்மாவும் கூடச் செல்வாள். பிள்ளைக்காக பிள்ளையின் விருப்பத்திற்காகப் போய் வந்தாள்.

முந்தி 'பஸ்.ஸ்ராண்டில் நடந்ததை விட மோசமாக இப்ப வீட்டு வாசலில் நடக்குது. முன்னுக்கும் பின்னுக்கும் குண்டுகள் விழுகின்றன. சனங்கள் எல்லாம் ஓடிவிட்டார்கள். வெள்ளை அம்மாவுக்கும் ஓடவேணும் போலத்தான். இருந்தது ஆனால் .. மஞ்சு? அவள் மாட்டேன் என்கிறாள். உணவுப் பொட்டலங்களோடும், முதலுதவிப் பெட்டிகளோடும் அவள் முன்னேறுகிறாளே? வெள்ளை அம்மா ஒண்டுஞ் செய்ய ஏலாமல் நிண்டாள்

ஆண்பிள்ளைகளைப் பற்றி வெள்ளை அம்மாவிற்கு கவலை இல்லை அவர்கள் உழைப்புத்தேடி தங்கள் ஊரைவிட்டு சில நூற்றுக்கணக்கான மைல்கள் தள்ளி இருக்கின்றார்கள். ஊர் முழுக்க அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. இதற்குள் மஞ்சுவின் அந்த இரு தோழிகளும் காணாமல் போய்விட்டார்கள். அவர்கள் தேடிக் கொண்

டிருந்த விடையை நோக்கி விரைந்து போய் விட்டார்கள் பாவம் மஞ்சு அவள் தனித்துப் போனாள். ஆனாலும் அவள் தன் வேலைகளை விட்டு விடவில்லை. இன்னும் வேகமாகச் செய்தாள். அவள் வேலை செய்யும் சூழ்நிலை மிகவும் பயங்கரமானது. ஆனாலும் அவள் தொடர்ந்தாள்.

ஒரு சில மாதங்கள் தான் போயின.

அங்குல அங்குலமாக இருந்த துப்பாக்கி மனிதர்கள் மெல்ல மெல்ல திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். துப்பாக்கிச் சத்தங்கள் நின்று போயிருந்தன. மஞ்சுவிற்கு விடுதலை கிடைத்து விட்டதோ என பெரிய சந்தோஷம். ஆனாலும், அவள் இப்போது சிறியவள் இல்லையே நிலைமையைத் தெளிந்து விட்டாள்.

புதிதாய் துப்பாக்கி மனிதர்கள் வந்தார்கள். அவர்களது மொழியும் புரியாத மொழிதான் அவர்கள் வந்த போது எம்மக்கள் பேசிக் கொண்டார்கள் ''இனிப்பயமில்லை. உவங்கள் சுடமாட்டாங்கள்'' என்று. மஞ்சுவுக்கு சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. அவள் அதோடு வேதனையும் கொண்டாள்.

''ஓம் ஓம். இவங்கள் இஞ்சை இன்னும் சுடத் தொடங்கவில்லை. அது தான் எங்கடை சனங்கள் சந்தோஷப்படுகுதுகள். கொஞ்ச நாள் போக எல்லாம் விளங்கும்'' மனதுக்குள் மஞ்சு சொல்லிக் கொண்டாள்.

அவள் தன் வேலைப் பயணத்தில் தன் தோழிகளைக்காண்கிறாள். அவர்கள் புதியவர்களாக ....... நம்பிக்கையூட்டுபவர்களாக ...... உடுப்பில் மாற்றம் அடைந்தவர்களாக ... துவக்கு வைத்திருப்பவர்களாக...... ஓ! எத்தனை மாற்றம். இவர்களுடைய துப்பாக்கிகள் வித்தியாசமானவை. ஏனென்றால், அவற்றை ஏந்தி இருப்பவர்கள் வித்தியாசமானவர்கள். மஞ்சுவும் அப்படித்தான் வரவேண்டியவள். ஆனால் ...... அதுதானே தவறிவிட்டது. அவள் சலிப்படையும் போது நம்பிக்கையைத் தோழிகள் ஊட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தியாக அவள் மீண்டும் தன்வேலைகளில்தான்...... அநேகமாக இப்போது வெள்ளை அம்மாவும் இந்த வேலைகளில் சற்று அதிகமாகவே தான் ஈடுபடுகிறாள்.

புதிதாக வந்த துப்பாக்கி மனிதர்கள் சுடத் தொடங்கி விட்டார்கள். தோழிகள் துப்பாக்கிகளோடு தேவைப்படும் இடத்திற்கு சென்றுவிட்டார்கள். மஞ்சுவினால் இவ்வாறு போக முடியாவிட்டாலும் மனதினுள் ஒரு உறுதி பிறக்கிறது. ஏதோ ஒரு வகையில் நான் வாழ்வது இந்த மண்ணுக்காகத்தான என்று.

இப்ப எல்லாம் அவளின் தோழியின் தோழர்கள் ஊரில் அவ்வளவாக இல்லை. ஆனால் வெள்ளை அம்மாவின் வீட்டிற்கு மட்டும் அவர்கள் அடிக்கடி வந்து சென்றார்கள். அவர்கள் சரியாகக் கஷ்டப்பட்டார்கள். அவர்களுக்கு வருத்தம் வந்தால் வெள்ளை அம்மா தன் பிள்ளைகளெனப் பராமரித்தாள். காயப்பட்டால் வைத்தியரைக்கூட்டி வந்தாள் அன்பாலும் ஆதரவாலும் இருவரும் குணப்படுத்தினார்கள். சாப்பாடு செய்துதூரத்திற்குச்சுமந்து சென்றார்கள் அவர்கள் செல்வதற்குப் பாதுகாப்பான பாதை காட்டினார்கள். சாமான்கள் வைத்து எடுத்துக் கொடுத்தார்கள். இந்த வேலைகளில் தாயும் மகளும் ஒருவருக் கொருவர் ஊக்கமாயிருந்தனர்.

இப்பவெல்லாம், முந்தி இந்த தோழர்கள் வர வேண்டும் என்று வாசலில் காத்திருந்தவர்கள் படலைகளை இறுகப் பூட்டி

இருந்தார்கள். தூரத்தில் இவர்களைக் கண்டவுடன் தம் பாதைகளை திடீரென்று மாற்றிக் கொள்வார்கள். போதாதற்கு வெள்ளை அம்மாவையும் மகளையும் போன்றோரை கேவலமாகத் திட்டிக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையிலும் வெள்ளை அம்மாவின் வீடு அடைக்கலம் அளிக்கும் ஆலயமாக அந்தத் தோழர்களுக்கு இருந்து வந்தது.

அந்தத் தோழர்கள் மஞ்சு வீட்டில் சாப்பிடும் போது சொல்வார்கள்.

''இப்ப நாங்கள் உங்கடை சாப்பாட்டைப் பகிர்கிறது. இதற்காக எங்கடை சாப்பாட்டை (சயனைட்) நீங்கள் பகிர வேண்டி வரலாம்'' என்று.

மஞ்சு சிரித்தபடி சொல்வாள்.

''அதற்கென்ன அப்பிடி வந்தால் பகிர்ந்து கொள்ளுவம்.''

மஞ்சு அம்மாவுக்கு அடிக்கடி சொல்வாள்.

''எங்கடை வீட்டைச் சுற்றி என்றோ ஒரு நாள் அந்த அந்நிய நாய்கள் வந்து நிற்கும். அவங்கள் எங்களைத் தொட முதல் நாங்கள் இந்தக் கிணத்துக்கை விழுந்து செத்துப் போகவேணும் அம்மா'' என்று.

அன்றைக்கும் அப்பிடித்தான் அந்த முன்பின்தெரிந்திராத அந்தக் காய்ச்சல்காரத் தம்பியை அவர்கள் கவனித்து விட்டுத் தம் தம் வேலைகளில்... அம்மாவும் மகளும்.

காய்ச்சல் மாறிய போது அந்தத் தம்பி தன் வேலைகளுக்குப் புறப்பட்டு விட்டான். எப்போதும் பாதை பார்த்து விடுகின்ற வெள்ளை அம்மா அன்று இல்லை. இவர்களுக்குத்தான் ஏதோ வாங்குவதற்காகக் கடைக்குப் போய் விட்டாள். மஞ்சு கிணற்றடியில் தண்ணீர அள்ளிக் கொண்டு நின்றாள். அந்தத்தம்பி ஒரு கொஞ்சத் தூரம் போகவில்லை. இரண்டு பெரிய சத்தங்கள் அம்மாவையும் மகளையும் திடுக்குறச் செய்கின்றன. ஆனாலும் எங்கள் தேசத்தில் இப்போது இவையெல்லாம் வழமையான சத்தங்கள் தானே. அந்த இரண்டு சத்தத்தில் ஒன்று அந்தத் தம்பி எதிரிக்கு எறிந்த குண்டின் சத்தம்; மற்றையது தனக்குத் தானே வெடிக்க வைத்த சத்தமும் என்பதை அப்போது அவர்கள் அறியவில்லை. தூசண வார்த்தைகளுக்கிடையில் அவளது பெயர் வெறித்தனமாகவெளீயறியதைக் கேட்டபோதுதான் சுற்றிவர அந்தத் துப்பாக்கி மனிதர்களோடு இந்த மண்ணின் வேட்டை நாய்களும் சேர்ந்து வந்ததை அவள் கண்டாள்.

சந்தோசமாக... ஆம் இந்த மண்ணிற்காக தான் சாவதை எண்ணிப் பெருமையுடன் அந்தத் தோழர்கள் கூறிய அவர்களின் உணர்வை அவள் பகிர்ந்து கொள்கிறாள்.

செய்தி கேட்டு பதறி அடித்து ஓடி வந்தாள். வெள்ளையம்மா. அவள் எந்த ஜீவனைத் தன் உயிர் என்று போற்றினாளோ அந்த உயிர் அவளுக்கு முன் இப்போது இல்லை. எந்தப் பிள்ளையின் முகம் வாடக் கூடாது என்று வாழ்ந்தாளோ அந்தப் பிள்ளை வாடி வதங்கிப் பிணமாய்... உதட்டோரம் ரத்தம் சிறிது கசிந்து முகம் கறுத்திருந்தது. அவளுக்கு சாகவேணும் போல இருந்தது...... கத்தி அழக்கூட அந்த ஓநாய்கள் கட்டுப்படுத்தின. அவளின் மரணத்திற்குக் கூட அநேகம் பேர் இல்லை. அப்படி எங்கள் தேசம் அடிமைப் பட்டுக் கிடந்தது ஆத்திரமடைந்த ஓநாய்கள் அந்த அப்பாவித் தாயை அடித்து நொருக்கிச் சென்றார்கள். சோகமாக இந்தத் தேசத்திற்கு ஒரு செய்தி சொல்லப்படுகிறது.

ஊரெல்லாம் மெல்ல எதைக் குசுகுசுக்கிறது.

வெள்ளை அம்மாவுக்கு எதுவும் கேக்கவில்லை அவளின் கண்கள் எதையும் பார்க்கவில்லை.

தெரிந்ததெல்லாம் பிள்ளை பயணம் செய்த பாதைதான். அவள் செய்ய வேண்டுமென்பதெல்லாம் பிள்ளையின் பணிகள் தான்.

நினைவுகளின் அணி வகுப்பில் வெள்ளைஅம்மா வின் கண்ணில் இருந்து இரண்டு துளிகள் தான் ஆம் இரண்டே இரண்டு துளிகள் தான் கண்ணைத் துடைத்தவாறு சுற்றிவரப் பார்க்கிறாள். இறங்க வேண்டிய இடம் போய் விட்டதை அறிந்து திடீரென "நிற்பாட்டு நிற்பாட்டு" என கத்துகிறாள். அவளுக்கு மஞ்சு எழுதிய, தான் பொக்கிசப்படுத்திய, அந்த மஞ்சளாகிப் போன காகிதங்களைப் பார்க்க வேண்டும் போல. அதில் இந்தத் தேசத்- தப் பற்றித் தான் அவள் எழுதியிருந் தாள். வெள்ளை அம்மா வைப் பற்றி ஒன்றும் இல்லை. இந்த எழுத்துக் கள் எல்லாம் வெள்ளை அம்மாவிற்கு பாடம் தான், ஆனாலும் அவள் ஒடுகி றாள்.......

ஆம் அவள் எதையும் பார்க்காயல ஒடிக்கொண்டிருக்கிறாள்......

●   ●   ●

வீரப் புதல்வி பிரீதி

இத்தகைய மாது சிரோன்மணியை இழந்த தந்தை சித்தம் கலங்கினார், மெய்மறந்தார் வீரத்தாய் மட்டிலும் மகளின் இணையற்ற தியாகத்தினால் பெருமிதம் கொண்டாள். "என் மகள் தேசத்திற்காகத் தன் உயிரை அர்ப்பணம் செய்தாள்" என்று கூறிப் பெருமையடைந்தாள். பிரீதி உயிர் துறந்த பின் அக் குடும்பத்தினர் அளவிலா அவதிப்பட்டனர். தாயார் மருத்துவத் தொழிலை மேற்கொண்டு கடஷ்டத்தை ஒருவாறு சமாளித்து வந்தாள்.

பிரீதியையோ அல்லது அவளுடைய வீரத் தியாகத்தையோ சிட்டகாங் மக்கள் ஒருபோதும் மறந்ததில்லை. 'தேசத்திற்காக உயிர்த் தியாகம் செய்த முதலாவது பெண்மணியின் தந்தை' என்பதாக அங்கு போகின்றவர்களிடத்தில் அவரை அறிமுகப்படுத்துவதின் மூலம் தந்தையைப் பெருமைப் படுத்துகிறார்கள் சிட்டகாங் மக்கள்.

'சிட்டகாங் வீரர்கள்' நூலில் கல்பனாதத்

களத்திலிருந்து ஒரு திருமுகம்

# இனியும் நான் சின்னவளோ?

வீ. பரந்தாமன்

அம்மா! உன் பிள்ளை அறியாப் பருவத்தள்;
சும்மாயா ரோவம்பர் சொல்லை விழுங்கிக்
களத்திலே போய்நின்று காய்கின்றா ளோ? வென் (று)
உளத்திலெழும் கொச்சை உணர்வுகளால் வாடாதே!

அன்றொருநாள், இல்லம் அதிர்ந்துதிர முற்றத்தில்
குன்று பிளந் தாற்போலக் குண்டு வெடித்திடவே
வேப்பமரம் கோழிகளும் வெள்ளாடும் மற்றுனது
காப்பரணாம் மஞ்சள் கயிறும் சிதறினவே!
தந்தையெமக் கில்லை; தாலியனக் கில்லையன் (று)
இந்தவகை நாங்கள் இரங்கிநெஞ் சேங்கினமே!

பின்னையும் நான்அறியாப் பிள்ளையோ? இன்னுமென்ன
கொன்னைமொழி பேசும் குழந்தையோ? இன்றுநான்.
ஏழிரண் டாண்டின் எழிலார் குமரியம்மா!
நாலிரண்டு சொல்லும் நயந்தவள்தான் பள்ளியிலே!

உன்னோ டிருந்துநான் உண்ணாத நாளெத்தனை?
கண்ணுறக்கம் இன்றிக் கலங்கியவா றேசிறிய
மண்குழிக்குள் மெல்ல மடிந்த இரவுபகல்
எண்ண முடியாவே; ஏனம்மா? வாழாமல்
சாகும்வாழ் வுக்கா தவிக்கின்றாய்? வானூர்தி

ஏகும் இரைச்சல், எறிகின்ற குண்டொலியும்
நெஞ்சைப் பிளக்க நினைவு தடுமாறி
அஞ்சிக் கிடக்கும் அவலந்தான் வாழ்க்கையதோ?

பின்னையும் நான்அறியாப் பிள்ளையோ? இன்னுமென்ன
கொன்னைமொழி பேசும் குழந்தையோ? இங்குநான்
கையில் கலமேந்திக் காப்பரணில் நிற்கின்றேன்
பொய்யில்லை அம்மா! புதுப்பெண்நான் எங்களுடை
மண்ணின் அரசியென்பேன்! மானம் நிறைந்தென்றன்
கண்ணில் ஒளிவீசு, கைகால தலைநிமிர்ந்து
விண்ணளவு நான்வளர்ந்து விட்டேன்: இனியுநான்
சின்னவளோ? இங்கு, சிலவேளை அண்ணன் -

அவர்தான் நீ வாயூறி வாழ்த்தும் மறவன்
சுவரோவியம் போல் தொலையா அழகரம்மா!
மண்ணில் தனிப்பிறவி - மாவீரர் - எம்முடைய
தண்ணந் தலைவரைத்தான் சாற்றுகிறேன்; வந்தவர்தாம்
நல்லொழுக்கம் வீரம் நடைமுறைகள் பேரறிவும்
எல்லாமே சொல்லித்தந் தேகுமந்நாள் எல்லாம்
எனக்கோ பிறந்தநாள் இங்கெவர்க்கும் பொன்நாள்!
மனக்கினியர் அண்ணார்மற் றுன்னில் இனியரம்மா!

இன்று நான் ஏதும் அறியாத சின்னவளோ?
விண்ணளவு பாயுமோர் வேங்கையம்மா! நான்முன்பு
போட்டசட்டை யும்படித்த புத்தகமும் மற்றெங்கள்
வீட்டில்நான் வைத்து விளையாடும் பாவைபந்தும்
எல்லாம் உனக்கிரக்கம் ஏற்படுத்த என்பழைய
பொல்லா நினைவைப் புதுக்கிவிடும் ஆதலினால்
அன்னவற்றை யாதுமின்றி அல்லற் படுகின்ற
சின்னச் சிறுமியர்பாற் சேர்த்துவிடு! தம்பியை

பள்ளிக்குப் போக்கிவை பாவம் வெயிற்சுடும்
சின்னக்கால் நோகும் செருப்புவாங் கிக்கொடம்மா!
மண்ணின் இருள்விடிந்து வாழ்வு மலரட்டும்
சின்னாள் பொறுப்பாய் செருவொழியும் நான்வந்துன்
பொன்முகம் காண்பேன் புலம்பாதே இப்படிக்குன்
அன்புமறவாத அழகு. □□

ஒப்பரேசன் பலவேகய II நடவடிக்கையில் வெற்றிலைக்கேணி — கட்டைக்காடு முகாமிலிருந்து சிறீலங்கா இராணுவத்தினர் ஆனையிறவு நோக்கி முன்னேற முயன்று கொண்டிருந்தனர். முன்னேறும் நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் எட்டாவது நாளாகத் தொடர்ந்து சமர் நடந்து கொண்டிருந்தது.

இயக்கச்சியில் எங்களுடைய வாகனம் பழுதுபட்டு நின்றதால் பார்த்து வர (05 - 07 - 92 ஞாயிற்றுக்கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் பளையில் இருந்து இயக்கச்சிக்குப் போய்க் கொண்டிருந்தோம். புதுக்காட்டுச் சந்திக்கருகில் சென்று கொண்டிருக்கும் பொழுது இயக்கச்சிப் பகுதியில் உலங்கு வானூர்தி ஒன்று வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந்தது.

மேலே உலங்கு வானூர்தி சுட்டுக்கொண்டிருக்கும் பொழுது தரையிலிருந்து எறிகணைத் தாக்குதலின் வெடியோசைகளும், துப்பாக்கி வேட்டொலிகளும் கேட்டுக் கொண்டிருந்தன; அப்பிரதேசம் அதிர்ந்து கொண்டிருந்தது.

நானும் என்னுடன் கூடவந்த சின்னமணி என்பவரும் தொடர்ந்து சைக்கிளில் போய்க் கொண்டிருந்தோம். சன நடமாட்டம் மிகக்குறைவு. இயக்கச்சி - கொம்படி வழிப்பயணிகளின் போக்கு வரத்து பலவேகய 11 நடவடிக்கையால் தடைப்பட்டிருந்தது. சண்டை (பலவேகய 11 நடவடிக்கை) ஆரம்பமாகுவதற்கு முதல் 25-6-92 அன்றே இயக்கச்சியில் குடியிருப்புக்கள் மீது குண்டு வீச்சும், எறிகணைத் தாக்குதலும் தொடங்கியதால் மக்கள் (சண்டை வலுப்பெற்று) தாக்குதல் கடுமையாகியதும் மெல்ல மெல்ல வெளியேறி, சண்டை நடக்காத இடங்களுக்குப் போகத் தொடங்கியிருந்தனர். ஆனாலும் இடையிடை பொதுமக்கள் இருந்தனர். நாங்கள் செல்லும் போது புதுக்காட்டுச் சந்தியில் இருந்து வீதியின் இருபக்கமும் உள்ள தென்னந் தோட்டங்களில் விமானங்கள் வீசிய குண்டுகளினால் தென்னைகள் முறிந்து சிதைந்து கிடந்தன. மனதைத் துயர் வருத்தியது. இந்த மரங்களை வளர்க்க எவ்வளவு உழைப்பு உழைத்திருப்பார்கள். பல இடங்களில் குண்டுகள் வீசப்பட்டதன் அழிவுகள் தெரிந்தன. திடீரெனச் சின்னமணி மூக்கைப் பொத்தினார். எங்கிருந்தோ நாற்றவாடை அடித்தது குண்டு வீசினால் ஊரவர்களின் ஆடோ, மாடோ பலியாகியிருக்கக் கூடும். முறிந்த தென்னைகளினதும்

# சங்காரமாகிய "வை 8" ஒரு வரலாற்றுப் பதிவு.

கருணாகரன்

வெடி மருந்தினதும் ஒருவகை நெடி அடித்தது. சிங்கள இராணுவத்துக்குத் தமிழரின் மந்தைகளென்றாலென்ன, மரங்களென்றாலென்ன? வீடுகளென்றாலென்ன? எல்லாம் விரோதம் தானே; தமிழரே எதிரிகளாக அவர்களுக்குத் தெரியும் வரை தமிழருடையவை அந்தப் பார்வையில் இருந்து தவறுமா? 'மருண்டவன் கண்ணுக்குத் தெரிவதெல்லாம்...'

நாங்கள் கரந்தாய்க் குளத்தைக் கடந்து இயக்கச்சிக்கு அண்மையாகச் செல்லும் போது ''சகடை வருகிறது'' என்று சின்னமணி சொன்னார்.

கிளிநொச்சிப் பக்கத்திலிருந்து ( தெற்கிருந்து வடக்குநோக்கி ) வை - 8 விமானம் வந்து கொண்டிருந்தது. சுற்றிக் கொண்டிருந்த உலங்கு வானூர்தி இப்பொழுது ஆனையிறவு முகாமில் தரையிறங்கி விட்டது. சகடை வந்தவுடனேயே குண்டுகளைப் போடத் தொடங்கியது 'சியாமாச் செட்டி' குண்டு வீச்சு விமானங்கள் வட்ட மிட்டுப் பதிந்தே குண்டுகளை வீசும். 'அவ்ரோ' விமானமும் அப்படித் தான். ஆனால் வை - 8 விமானம் அப்படியல்ல. விமானம் வான் வெளிப்பிரதேசத்தில் ஒரு சீராகப் பறந்து கொண்டிருக்கையில் இலக்கு நோக்கிக் குண்டுகளை வீசும்.

முதலாவது குண்டு எவ்விடத்தில் விழுகிறது என அவதானித்து நாம் தற்காப்பு எடுத்துக் கொண்டோம். இயக்கச்சி - சங்கத்தார்வயல்ப் பகுதியில் குண்டு விழுவதாக நாங்கள் அனுமானித்துக் கொண்டோம். நாங்கள் நின்ற இடத்திற்கு அருகில் சில பொதுமக்களும் இருந்தனர். இருந்தவர்களின் மனதில் பயத்தின் மிரட்சி முகங்களிலும், அவர்களின் பதற்றத்திலும் தெரிந்தது. நாங்கள் ''பயப்படாதீர்கள் பயந்து என்ன ஆகப்போகிறது'' என அவர்களை உற்சாகப் படுத்தி விமானத்தை அவதானித்துக் கொண்டிருந்தோம். எட்டாவது நாளாகச் சண்டை நடைபெறுவதால் இடைவிடாத விமானத் தாக்குதலில் எவ்வளவோ அழிவுகள் அந்தப் பகுதியில் தெரிந்தன. 'லக்ஷ்பான' மின் கோபுரம், கடைக்கட்டிடங்கள், வீடுகள், சந்தை, பாடசாலை, தேவாலயம், மற்றும் மரங்கள், செடிகள் எல்லாமே இடிந்தும், சிதைந்தும், அழிந்தும் காணப்பட்டன. ஊழி தாண்டவமாடிய தடயங்கள் துயரத்தின் வடுக்களாக நெஞ்சைப் பிழிந்தன ''ஒவ்வொருநாள் தாக்குதலுக்குள்ளும் இந்தச் சனங்களும் இந்தப் பெடியளும் (போராளிகளும்) எவ்வளவு பாடுபட்டிருக்குதுகள்'' என சின்னமணி என்னிடம் ஆதங்கத்துடன் கூறினார். உண்மையில் இவையெல்லாம் உணர்வைப் பிழியும் நிகழ்வுகள் தான். எம்முடன் இரண்டு ஆசிரியர்களும் நின்றார்கள். எல்லோருமாக பத்துப்பேர் வரையில் தான் அங்கு நின்றோம்.

போராளிகள் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். விமானத்தை நோக்கிச் சுடும் ஒலி கேட்டது காயப்படும் போராளிகளை எடுத்துச் செல்வதற்காக வாகனங்களும், சாரதிகளும், துணையாகவும், பராமரிக்கவும் வேறு சிலரும் அங்கங்கே நின்றனர். தண்ணீர் நிரப்பிய கொள்கலனை இரண்டு போராளிகள் தடியில் கொழுவி சிரமப்பட்டுத் தூக்கி வந்தனர். சின்னமணியும் நானும் அவர்களிடமிருந்து கொள்கலனை வாங்கி சைக்கிளில், கொண்டு செல்ல வேண்டிய இடத்திற்குக் கொடுக்கச் சென்றோம்.

விமானம் தொடர்ந்து குண்டுகளை வீசிக் கொண்டிருந்தது. கீழேயிருந்து விமானத்தை நோக்கிப் புலிகள் சுட்டுக் கொண்டிருந்தனர். தண்ணீர்க்கலனை உரிய இடத்தில் கொடுத்துவிட்டுத் திரும்பினோம். இன்னும் விமானம் தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டேயிருந்தது. இப்போது நாங்கள் முன்னர் நின்ற இடத்திற்கு வந்து விட்

டோம். அருகில் நின்ற பெண் ஒருவர் திட்டிக் கொண்டிருந்தார்.

''இந்தக் கொடுமை செய்வாங்கள் ஏனிப்பிடி அநியாயம் செய்கிறாங்கள்? இப்பிடியும் ஒரு அரசாங்கமோ? எத்தனை பிள்ளைகள் இதில் அகப்படுமோ'' என என ஆதங்கப்பட்டார்.

விமானம் குண்டினைப் போடடுவிட்டு ஆழியவளைக் கடற்கரைப் பக்கமாகச் சென்று திரும்பி மறுபடியும் முதல் வீசப் பட்ட இலக்குக்கு குண்டு போட்டுவிட்டு பரந்தன் பக்கமாகச் சென்று திரும்பி...... (வடக்குத் - தெற்கு திசையில் எட்டுவடிவில் பாதையமைத்து) குண்டு போட்டு ....... அரை மணித்தியாலம் வரையில் அகோரத் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. விமானம் யுத்தப் பிரதேசத்துக்கு நேராக வரும் பொழுது புலிகள் தரையிலிருந்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டேயிருந்தனர். ஒவ்வொரு குண்டு போடப் படும் போதும் நாங்கள் அவதானித்துக் கொண்டே இருந்தோம். ஒரு ஊமல் அளவில், சிறியதாக, கறுப்பாக, குண்டு விமானத்திலிருந்து கீழே வந்து கொண்டிருக்கும். விமானத்தில் இருந்து தள்ளப் பட்ட ஒரு நிமிடத்திற்குள்ளாக குண்டு பெரும் அதிர்வுடன் வெடிக்கும். இவ்வாறு ஏழு குண்டுகள் போடப்பட்டு விட்டன.

வடதிசையில் இருந்து திரும்பி எட்டாவது குண்டும் போடப்பட்டாயிற்று. நாங்கள் விமானத்தில் கண் பதித்திருந்தோம். புலிகளின் துப்பாக்கிகள் முழங்கிக் கொண்டேயிருந்தன. திரும்பி வந்து கொண்டிருந்த விமானம் அந்தரத்தில்; வான்வெளியில் தீப்பற்றியது. தீயும் புகையும் தெரிந்த சமவேளையில் பெரும் அதிர்வுடன் வெடித்தது. வெடியா அது? அதன் அதிர்வு மரம், செடி, நிலம் எல்லாவற்றையும் ஒரு கணம் ஆட்டிவைத்தது. இருதயமும், செவியும் இயல்பு மீறித் தொழிற்பட்டன. (இந்தச் சத்தமும் அதிர்வும பளை எழுதுமட்டுவாள் வரை இருந்ததாக அப்பகுதி மக்கள் கூறினார்கள்.)

எல்லாம் ஒரு நிமிடத்துள் முடிந்தது. பேய்கள் சங்காரமாகின. எங்களுடன் நின்றவர்கள் மகிழ்ச்சியில் சத்தமிட்டனர். ஆரவாரித்தனர். எல்லையற்ற சந்தோசம் அது.

விமானம் வானத்தில் வெடித்துச் சிதறியதும் கறுப்பாக ஒரு பொருள் மெல்ல மெல்லக் கீழே விழுந்து கொண்டிருந்தது. அப்பொருள் விழும் போது அதன் பின்னால் [மேலிருந்து கீழாக] புகைக்கோடு அப்பொருளுடன் தொடர்வது தெரிந்தது. [ஜெட் விமானம் செல்கையில் புகைக் கோடு தெரியுமே...... அது வெண்ணிறமாகத் தெரியும். இது கரும்புகையாகத் தெரிந்தது.]

விமானம் அழிந்ததில் எல்லோருக்கும் அளவு கடந்த மகிழ்ச்சி. ''தொலைவார் தொலைஞ்சு போனாங்கள் எங்கட பெடியள் கெட்டிக்காரர் தான்'' என்று அருகில் சொல்லிக் கேட்டது.

சிதைவுகள் கீழே விழுந்த பின் தூரத்தில் காட்டுத் தீ மூண்டெரியும் போது எவ்வாறு கரும்புகை தெரியுமோ, அவ்வாறே புகைமண்டலமாகத் தெரிந்தது. நீண்ட நேரமாக புகை மேற்கிளம்பியபடியே இருந்தது. மாலைச் சூரியன் மறைந்து இருள் பரவும் வரையில் புகைப்படலம் காற்றில் எழுந்து கொண்டேயிருந்தது.

பொழுது இருட்டி விட்டதால் அப்பாலே செல்ல முடியாமல் நாங்கள் பளைக்குத் திரும்பினோம். பளைக்கு அண்மை

யில் வரும் போது வழிநெடுக மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம்; வாகனச் சாரதிக ளின் சந்தோசப் பிரவாகம். சிறு பிள்ளை களின் ஆனந்தத்துக்கு அளவேயில்லாமல் இருந்தது.

சன்னதமாடிய பேய்கள் அழிவதில் யாருக்குத்தான் மகிழ்ச்சி இருக்காது?

வை — 8 விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது மட்டுமல்லாமல் விமானி யின் சடலத்தையும், விமானத்தின் சிதை வுகளையும் புலிகள் மீட்டெடுத்தனர். மறு நாள் (திங்கள்) காலை 7.00 மணியளவில் நான் யாழ்ப்பாணம் வந்தபோது கோண் டாவில் பகுதியில் அவை பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

புலிகளின் வேகத்தையும், செயற்திற னையும் நினைத்து வியந்தேன். — முதல் நாள், இராணுவ நடவடிக்கை தீவிரமாக நடந்து கொண்டிருக்கும் போது, அப்பகுதி யில் இருந்து, மாலை நேரம் சுட்டு வீழ்த் தப்பட்ட விமானத்தின் சிதைவுகளையும், விமானியின் சடலத்தையும் இவ்வளவு துரிதகதியில் இரவிரவாக மீட்டெடுத்துள் ளனர். புலிகள் புலிகள் தான்.

வரலாற்றுச் சக்கரத்தைப் புரட்டக் கூடிய துறன் படைத்தவர்கள் 'விடுதலைப் புலிகள்' என்பதற்கு இந்தச் சம்பவம் மேலும் ஒரு சான்று. □□

□ □

## அடுத்த இதழ்

# "வெளிச்சம்"

## முதலாண்டு நிறைவுச் சிறப்பிதழ்

## சிறுகதைச் சிறப்பிதழாக வெளிவருகிறது.

படைப்பாளிகளிடமிருந்து
படைப்புக்களை எதிர்பார்க்கிறோம்.

# வெளிச்சம்

ஆடி - ஆவணி 1992

இதழ் 6

இது வெளிச்சத்தின் ஆறாவது இதழ்.
கடந்த ஒரு வருடமாக இரு திங்கள்'தழாக ஒழுங்காக
வெளிச்சம் வெளி வந்துள்ளதே.
நினைக்கும்போதுநெஞ்சுக்கு நிறைவாக இருக்கிறது.
வெளிச்சத்தைத் திங்கள் தோறும் வெளியிடும் எமது அடுத்த கட்ட வேலைகள்
யாவும் பூர்த்தியடைந்து விட்டன.
இனித் திங்கள் தோறும் வெளிச்சம் உங்கள் கரங்களில் பரவும்.

எமது உயிரனைய தமிழீழத் தாயக விடுதலையை வென்றெடுப்பதிலும்,
அனைத்து அடக்குமுறைகளுக்கும் எதிராக குரல் கொடுப்பதிலும்,
கலை, இலக்கியப் படைப்பாளிகளையும், அறிஞர்களையும்,
ஆய்வாளர்களையும், ஆர்வலர்களையும் இணைத்து
அவர்தம் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதிலும்
வெளிச்சம் வெற்றி கண்டுள்ளது.

முன்னரே பேர்கொண்ட படைப்பாளிகளிலிருந்து, புதிதாகப் புலர்வு
கொள்ளும் இளம் படைப்பாளிகள் வரை வெளிச்சம்
எல்லோருக்கும் இடமளித்துள்ளது; இதன் மூலம்
அனைவரையும் இனங்கண்டுள்ளது.

இந்தப் போராட்டத்தைப் பாடாத வாயும், எழுதாத கையும் இருந்தென்ன
இல்லாதுவிட்டென்ன என்று போர்க் கோலம் பூண்டு தங்களை
முற்றாகவே இந்தப் போராட்டத்துடன் இணைத்துக்
கொண்ட கலைஞர்களும், படைப்பாளிகளும்,
அறிஞர்களும் வெளிச்சத்தின் வளர்ச்சியுடன் தங்களையும்
இணைத்துக் கொண்டனர்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் வெளியீடான இந்த வெளிச்சம் அந்நியனின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட எமது மண்ணில் இருந்து வெளிவரத் தொடங்கியுள்ளது. எமது தாயகத்தின் விடுதலைக்குப் பின்னரும் வெளிச்சம் வெளிவர வேண்டும் என்று எமது நெஞ்சில்கனவுப்பூ மலர வைத்துள்ளோம்.

கனவுகள் தானே எந்த அசைவையும் நகர்த்தும் உந்து சக்தி. விடுதலை என்ற கனவு தான் எமது போராட்டத்தையே உயிருள்ளதாக்கி; நகர்வுள்ளதாக்குகின்றது. அது போல் வெளிச்சத்தைச் சுற்றிய எமது கனவு, வெளிச்சத்தைப் புதுப் பொலிவு ஆக்குகின்றது.

நாங்கள் எமது வழித்தடத்தில் எல்லோரையும் இணைத்துக் கொண்டு, கை பற்றி நடக்கவே விரும்புகின்றோம். எவரையும் ஒதுக்கி விட்டுப் பயணம் போகும் எண்ணம் வெளிச்சத்திற்கு இல்லை. நீதியின் பக்கத்தில் நிற்கும். நியாயத்தின் நிழலிலே நிற்கும் எமது விடுதலைப் போரை வென்றெடுப்பதில் அனைவரையும் அரவணைத்துக் கொண்டே வெளிச்சம் நடைபோட விரும்புகின்றது.

வெளிச்சத்தை இன்னும் வெளிச்சமாக்கும் புதிய கருத்துக்களை வரவேற்கின்றோம். நெஞ்சங்களை நிறைக்ச் செய்யும் படைப்புக்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். காலத்தின் தேவையை உணர்ந்து, விடுதலையின் வெற்றியை நோக்கிய எமது போராட்டத்தின் பக்கத்தில் நீங்களும் உங்கள் பேனாவும் நிற்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம்.

நம்பிக்கை எமக்குண்டு!
நாங்கள் வெல்லுவோம்!



# மேஜர் அழகன்

பெயர்கள் சிலருக்குத்தான் பொருந்துகின்றன. அந்தச் சிலருக்குள் அழகனும் அடங்குவான். எந்த நேரமும் சிரிப்பு, எந்த நேரமும் பகிடி. இப்படியிருக்க அழகனால் எப்படி முடிந்தது? பதில் கிடைக்காத புதிராகத்தான் இனியும் இருக்கப் போகிறது. தன் தோள்சுமந்த பெரிய பொறுப்பின் சுமைகளுக்கு மத்தியிலும், இவன் காற்றில் மிதப்பது போல இலகுவாகத்தான் இருந்தான். தான் ஏற்றுக்கொண்டபணிக்காகத் தினசரிஇருபத்து நான்கு மணி நேரமும் இயங்கினான்.

''ஈழநாதம்'' தினசரீ நிர்வாகத்தை அழகன் இலகுவானதாக ஆக்கிவிட்டான். ஆனால் தினசரீயை ஆரம்பித்த காலத்தில் இமயமலையை நகர்த்தும் வேலை போல் சிந்திக்க முடியாத சிரமமாக . இருந்தது. புதிதாக ஒரு நிறுவனத்தை நிர்மாணிப்பதற்கு அசாதாரணமான ஆளுமையும், உழைப்பும், துணிவும் தேவை. இவையெல்லாம் அழகனிடம் குடியிருந்தன. இதனாற்தான் அழகன் இரண்டு வருடங்களுக்குள் ஈழநாதத்தைத் தமிழீழத்தின் இதய நாதமாக்கினான்.

திறமையான போராளியாகவும், திட்டமிட்டுப் பணிமுடிக்கும் பொறுப்பாளனாகவும், எல்லோர்க்கும் இனிய நண்பனாகவும், ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்து முடிக்கும் ஆற்றலாளளாகவும் அழகன் எங்களுடன் உலா வந்தான்.

சமர்க் களத்திற் செய்தி சேகரிக்க இவன் செய்தியாளர்களை அனுப்பி விட்டு இருந்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் அழகன் இன்றும் எங்களுடன் இருந்திருப்பான். ஆனால் போராளியான இவன் பொறுப்புடன் தானே செய்தி தேடிச் சமர்களம் போனான்...... போய்விட்டான்.

வெளிச்சத்தின் வெற்றியிலும், வியாபகத்திலும் அழகனுக்கு நிறையவே பங்குண்டு, அழகனுக்கு வெளிச்சம் அஞ்சலி செய்கின்றது. □□

உன்னி உன்னி உழக்குகிறாய்
ஊர் ஊராகச் சுற்றுகிறாய்
சின்னப் பெண்ணே உன்னால் நம்
தேசம் நிமிரப் போகிறது!

உன்னைச் சுமந்து பெற்றாளை
உயிராய்க் கருத் வளர்த்தாளை
பின்னால் இருத்தி சைக்கிளிலே
பியத்துக் கொண்டு போகின்றாய்!

அண்ணன் அயல்நாடு அலைகின்றான்
அப்பன் ஷெல்லால் அடியுண்டான்
பெண்ணே நீயோ இங்கிருந்து
பெரிய சுமைகள் சுமக்கின்றாய்!

என்ன என்ன அவசரமோ!
என்ன என்ன நெருக்கடியோ!
உன்னி உன்னி உழக்குகிறாய்
ஓ, என் பெண்ணே நீ வாழ்க!

சின்னக் காலின் வலுவெல்லாம்
சேர்த்து வலித்தே உழக்குகிற
உன்னைக் காணும் போதெல்லாம்
உள்ளம் பாகாய் உருகுதடி!

உன்னி உன்னி உழக்குகிறாய்
ஊர் ஊராகச் சுற்றுகிறாய்
உன்னைத் தெருவில் காண்கையில் என்
உயிரே சிலிர்த்துப் போகுதடி!

# உன்னி உன்னி

சோ. பத்மநாதன்

சிறிலங்காவின் ஊவாமாகாணத்தில் உள்ள 'புத்தல' என்னும் கிராமத்தில் நடைபெற்ற 'கம் உதாவ' கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸ அங்கேயே தனது 68வதுபிறந்த தினத்தைக் கொண்டாடினார். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. மோதிலால் நேரு அங்கு சென்று திரு. பிரேமதாஸவிற்கு வாழ்த்துத் தெரிவித்திருந்தார். அத்துடன் 28 - 06 - 92 திகதிய 'சண்டே ரைம்ஸ்' இதழில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸாவைப் பற்றி திரு. மோதிலால் நேரு சில கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அக்கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலத்திற்கும் மோதிலால் நேருவுக்குமிடையில் சில கருத்து முரண்பாடுகள் தோன்றின. 28 - 07 - 92 சண்டே ரைம்ஸ் இதழ் இருவரது முரண்பாடான கருத்துக்களையும் (வெளியே சொல்லக் கூடியவற்றை) ஒரே பக்கத்தில் பிரசுரித்திருந்தது. இதன் மொழியாக்கத்தை நானும் படித்தேன்.

திரு. பிரேமதாஸா ஏழை மக்களின் இரட்சகர் என்ற வகையிலும், சமாதானத்திற்கான தூதுவர் என்ற வகையிலுமாக திரு. மோதிலால் நேருவின் கருத்துக்கள் அமைந்திருந்தன. அத்துடன் அவரால் எதிர்பார்க்கப்படும் சமாதானத்திற்கான சொர்க்க புரியில் பிரேமதாஸாவும் தானும் கை கோர்த்து நிற்பது போன்ற உணர்வுடன் அவர் வாழ்த்துத் தெரிவித்திருப்பதை உணர முடிந்தது "எனது மக்களின் சார்பாக அவரது பிறந்த தினத்தில் வாழ்த்துக் கூறுவதன் மூலம் இத் தீவில் வாழும் சிறுபான்மை மக்கள், அமைதியை நிலைநாட்டும் அவரது முயற்சிக்குப் பின்பலமாக நிற்கின்றார்கள் என்பதைப் புலப்படுத்த விழைந்தேன்" என்று மோதிலால் நேரு குறிப்பிட்டிருந்தார்.

திரு. குமார் பொன்னம்பலத்தின் கருத்துக்கள் எதிர்மாறானவையாக இருந்தன. 'நேருவின் அறிக்கையில் குறிப்பிட்ட விடயங்களுக்கு ஆதாரமானவற்றைப் பட்டியலிட்டுக் காட்ட முடியுமா?" என்றும்; "இது காலவரையில், எரியும் பிரச்சினை

# இன்றைய நிகழ்வில் அன்றைய நினைவுகள்

**கரும்பறவை**

குறித்த ஜனாதிபதியின் ஈடுபாடு பற்றி, தனது ஆழ்ந்த அவதானிப்பை திரு. மோதிலால் நேரு ஏன் பகிரங்கப் படுத்தவில்லை?'' என்றும் கேட்டிருந்தார். அத்துடன், ''பிரேமதாஸா பதவிக்கு வந்த பின்னர் சிறுபான்மையினர் மத்தியில் பாதுகாப்பு உணர்வொன்று முளைவிடத் தொடங்கியது'' என்ற திரு. மோதிலால் நேருவின் கூற்றை, ''திரு மோதிலால் நேரு கொழும்பில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மூன்றாமவர்களின் சார்பில் பேச முற்படுகின்றாரா? எனக் கேட்க வேண்டியுள்ளது'' என்று விமர்சித்திருந்தார் அவர். 'திரு பிரேமதாஸாவை ஒரு சிங்கள, பௌத்தராகவே' தான் இனங்கண்டதாகக் குறிப்பிட்டார். தனது கருத்தை வலியுறுத்தும் வகையில் ''தினசரி தொலைக்காட்சிச் செய்திகளை அவதானிக்கும் எவரும் நான் என்ன கூறுகிறேன் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்'' என்று கூறினார்.

'இன்னமும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்' கட்சித் தலைவராக இருக்கும் திரு. குமார் பொன்னம்பலத்தின் மேற்படி கூற்றும் (தினசரி தொலைக்காட்சிச் செய்தி பற்றியது) திரு. மோதிலால் நேருவின் கருத்துக்களும், தமிழீழத்தின் யதார்த்த நிலையை இருவரும் முழுமையாக உணராத தன்மையைத் தெளிவு படுத்தியது.

இதில் கவனத்துக்குரிய விடயம் என்னவென்றால், ''இவ்வகையான காரணம் காட்டுதல்கள் தான் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸை, திரு. மோதிலால் நேருவை வெளியேற்றும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்குகிறது'' என்ற திரு. குமார் பொன்னம்பலத்தின் கூற்றுத்தான்.

கடந்த வெளிச்சம் இதழில் பிரசுரமாகியிருந்த இதே தலைப்பிலான எனது கட்டுரையில், '1983 ம் ஆண்டின் முற்பகுதியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் சமயத்தில் நடைபெற்ற சில சம்பவங்களைக் குறிப்பிட்டிருந்தேன். அதில், ''தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் இரட்டையர்களான திரு. குமார் பொன்னம்பலத்தையும் திரு. மோதிலால் நேருவையும் சீலன், பண்டிதர், ரகு, நான் ஆகிய நால்வரும் சென்று ''இத் தேர்தலிலிருந்து உங்கள் கட்சி விலகிக் கொள்ளும் படி கேட்டிருந்தோம்'' என்று குறிப்பிட்டிருந்தேன். எந்த நேரத்தில் இதை நான் எழுதினேனோ, அந்த அச்சு மை காய்வதற்குள் இந்த இரட்டையர்களுக்குள் இப்படி ஒரு நிலை மீண்டும் 1983 ஆம் ஆண்டு நாங்கள் இந்த இருவரையும் சந்தித்த காட்சி நினைவுக்கு வந்தது.

□ □ □ □

ரகுவின் மாமனார்தான் மோதிலால் நேரு (தாயின் சகோதரர்) ஆகவே இந்தச் சந்திப்புக்காக பெரிய சிரமமெதுவும் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கவில்லை. சந்திப்பு நடந்த இடம் யாழ்ப்பாணம் பிரதான வீதியில், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைமைக் காரியாலயத்துடன் இணைந்ததாக இருந்த திரு. குமார் பொன்னம்பலத்தின் இல்லமாகும். இந்த இல்லத்திலிருந்து கால் மைல் தூரத்திலேயே, பொது நூலக எரிப்பின் மூலம் புகழ் பெற்ற யாழ் காவல் நிலையம் இருந்தது. சிறிலங்கா காவல் படையினர் பயமின்றி நடமாடும் பகுதி இது. இதற்குள்ளேயே எமது சந்திப்பு நிகழ்ந்தது எமது 'தேசிய வாகனமான' மிதிவண்டிகளிலேயே நாம் சென்றிருந்தோம். சில நாட்களுக்கு முன்னர் தான் 'ஐக்கிய தேசியக் கட்சி'யைச் சேர்ந்த மூவர் (இரு தலைமை வேட்பாளர்கள், ஒரு அமைப்பாளர்) எம்மால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். அதனாலோ என்னவோ

''மிகுந்த பயபக்தியுடன்'' வரவேற்கப்பட்டோம்.

ஆசனங்களில் அமருமாறு திரு. குமார் பொன்னம்பலம் வேண்டிக் கொண்டார். நட்புக் கலந்த சிரிப்புடன் அமர்ந்தோம். அவர்கள் தரப்பில் திரு. குமார் பொன்னம்பலமும், திரு. மோதிலால் நேருவும் மட்டுமே எம்முடன் பேசுவதற்கு இருந்தனர். குடிப்பதற்குப் பால் தேனீர் வந்தது. அதைக் குடிக்குமாறு குமார் பொன்னம்பலம் வேண்டிக் கொண்டார். அந்தக் காலத்தில் நாம் பொதுவாகத் தேனீர் அருந்துவதில்லை. (கட்டுப்பாடு என்று எதுவுமில்லை) ஆதலால், ''நாங்கள் ரீ குடிக்கிறதில்லை'' என்று நட்புடன் மறுத்தோம். அவ்வளவு தான், திரு. குமார் பொன்னம்பலத்தின் முகம் மாறிற்று. ''என்னட்டை ரீ குடிக்கப் பயப்பிடுறீங்களோ? வேணுமெண்டா நான் ஒண்டைக் குடிச்சுக் காட்டுறன்'' என்றவாறு ஒரு கோப்பை தேனீரை எடுத்துக் குடித்தார். 'இதென்னடா வம்பாய்ப் போச்சு' என்ற நினைப்புடன், ''அப்பிடியெல்லாம் ஒண்டுமில்ல, நாங்கள் வழமையாகக் குடிக்கிறேல்ல. ஆனா, நீங்கள் இப்பிடிச் சொல்லுறதால குடிக்கிறம்'' என்றவாறே பண்டிதர் முதல் கோப்பையை எடுத்தார். அதைத் தொடர்ந்து நாமும் எடுத்துப் பருகினோம். (நீண்ட நாட்களின் பின் நாம் குடித்த தேனீர் அது.) உரையாடல் தொடர்ந்தது. சீலன் பேச்சை ஆரம்பித்தான். நாங்கள் ஏன் இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிக்கச் சொல்கிறோம் என்ற காரணங்களை அடுக்கடுக்காக - தெளிவாக எடுத்துச் சொன்னான். அவர்களது உலகத்திற்கும், எமது உலகத்திற்கும் நீண்ட தூர இடைவெளி இருந்தாலும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தனர் இருவரும்.

அந்தச் சந்திப்பிலிருந்து, குமார் பொன்னம்பலம் சரளமாகத் தமிழில் பேசுவதற்கு சிரமப்படுகிறார் என்பதைப் புரிந்து கொண்டோம். - அவர் கற்ற கல்வி, வாழ்ந்த சூழல் ஆங்கிலத்தை முழுமையாகக் கொண்டதால் அந்த நிலை ஏற்பட்டது என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. சீலன், குமார் பொன்னம்பலத்துடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது, மோதிலால் நேரு இடையிடையே பண்டிதருடனும், ரகுவுடனும் கதைத்துக் கொண்டிருந்தார். சீலன் சொல்வதை விளங்கிக் கொள்ள குமார் சிரமப்படுகிறார் என்பதை நான் புரிந்து கொண்டேன். அதை உறுதிப்படுத்துமாப் போல், ''கேளும், கேளும்'' என்று நேருவிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார் குமார். சொல்வதை விளங்காத நிலையில், 'தான் எல்லாவற்றிற்கும் சம்மதித்து விடுவேனோ? என்ன வில்லங்கம் வருமோ' என்ற பயத்தை விளங்கிக் கொள்ள முடிந்தது. இறுதியாக, ''நீங்கள் எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்ளுவீங்களெண்டு நினைக்கிறம். அந்த நம்பிக்கையோட தான் வந்தனாங்கள்'' என்று கூறினான் சீலன். குமாரும், நேருவும் தங்களுடைய உலகத்திற்கு வந்தனர்.

''நீங்கள் சொல்லுறது சரி. ஆனா எங்களுக்கு உள்ள பிரச்சினை கூட்டணி தான். நாங்கள் இந்த எலக்‌ஷனில இருந்து வாபஸ் வாங்கினா, அவங்கள் தானே எல்லா இடத்துக்கும் வருவாங்கள்? அவங்கள் கள்ளன்கள்; சென்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலிலையும் எங்களை ஏமாத்திப் பேப்பட்டம் கட்டிப் போட்டாங்கள் - இப்ப, பப்ளிக் லைபிறறியெல்லாம் எரிஞ்சு, கலவரம் வந்த நிலையில நாங்களும் அவங்களும் சந்திச்சதை சாட்டா வைச்சு 'கொங்கிறஸ் எலக்‌ஷனில இருந்து வாபஸ் வாங்கீட்டுது' எண்டு கதையைக் கட்டி விட்டாங்கள்; நாங்கள் எங்கட நிலைய விளங்கப்படுத்த அவகாசம் இருக்கேல்ல. கடைசியில முழுச்சீற்றையும் அவங்கள் எடுத்துப் போட்டாங்கள். அது தான்

பிரச்சினை. இப்பவும் அந்த மாதிரித் தான் நடக்கும் போல இருக்குது. நாங்கள் வாபஸ் வாங்கினவுடன அவங்கள் எல்லோ எல்லா சீற்றையும் பிடிக்கப் போறாங்கள்? அது தான் எங்களுக்குள்ள பிரச்சனை!'' குமாருடனான ஆங்கில உரையாடலுக்குப் பின் எம்டம் இவ்வாறு கேட்டார் நேரு. அதற்கு நாம் (குறிப்பாக சீலன், பண்டிதர்) ''கூட்டணிக்காறரை சிம்மாசனத்தில ஏத்து றதுக்காக நாங்கள் இந்தப் பகிஷ்கரிப்புக் கோரிக்கையை முன்வைக்கயில்ல. சிறீலங்கா அரசு நிர்வாகத்துக்கான சகல தேர்தல் களையும் நாங்கள் நிராகரிக்கக் கேக்கிறம். சொல்லப் போனா கூட்டணியோட மோதுற பலப்பரீட்சை தான் இது. இதில ஆற்றை பக்கம் நிக்க வேணும் எண்டதை நீங்கள் தீர்மானியுங்கோ!'' என்றோம். இதைக் கேட்டதும் (கூட்டணியுடன் மோதுவது) அவர்கள் இருவருக்கும் மகிழ்ச்சி தாள வில்லை. என்றாலும் அவர்களுக்கு ஒரு சந்தேகம் ''எல்லாரும் எலக்சனில வாபஸ் வாங்கினாலும், கூட்டணி தனியப் போட்டியிடும்; எலக்ஷனும் நடக்கும். அப்ப இந்த எலக்ஷனை உங்களால நிப்பாட்ட முடியுமே? முடியுமெண்டா கை போடுங்கோ!'' என்று கையை நீட்டினார் மோதிலால். உடனே, அவர் நீட்டும் கைக்கு எங்களில் யாராவது கை போட்டுவிட்டால்......? என்று கருதிய சீலன் எங்கள் பக்கமாக ஒரு கையால தடுத்த படியே, ''பகிஷ்கரியுங்கோ எண்ட கோரிக்கையை நாங்கள் உங்களிட்டை வைக்கிறம். எங்களை மதிச்சு அதை ஏற்கிறதும் ஏற்காமல் விடுறதும் உங்களைப் பொறுத்தது. எங்களைப் பொறுத்த வரை இந்த எலக்ஷனை நிப்பாட்டுறதுக்கு எங்களால ஆன ஆகக் கூடிய முயற்சிகளை மேற்கொள்ளுவம்'' என்றான் இதற்கு என்ன சொல்வது என்று தெரிய வில்லை அவர்களுக்கும். கொஞ்ச நேரம் சிந்தித்த பின் தேர்தலில் இருந்து வாபஸ் வாங்குவதாகத் தீர்மானித்தனர் இருவரும். அது பற்றி, குமார் சொன்னார் ''சரி தம்பிமார், காட்டிலயும் மேட்டிலயும் கஷ்டப்படுகிற நீங்கள் வந்து கேக்கிற போது, நாங்கள் சம்மதிக்காமல் இருக்க முடியாது உங்களுக்காக நாங்கள் இந்த எலக்ஷனில நிக்காம வாபஸ் வாங்குறம். ஆனா, எங்களுக்காக நீங்கள் ஒண்டு செய்ய வேணும். எலக்ஷனுக்குப் பிறகு, உங்களுடைய சிம்பல் (இலச்சினை) போட்டு நீங்கள் மக்களுக்கு வெளியிடுகிற நோட்டீஸில, 'எங்களுடைய பகிஷ்கரிப்புக் கோரிக்கையை ஏற்று, தேர்தலில் இருந்து வாபஸ் வாங்கிய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கும் எமது நன்றிகள் எண்டு குறிப்பிட வேணும்'' என்று சொல்லிவிட்டு சீலனின் முகத்தைப் பார்த்தார். சீலன் மெல்லிய புன்னகையுடன் ''அப்பிடி நாங்கள் அடிச்சுவிட மாட்டம். எங்களை மதிக்கிறதா இருந்தா வாபஸ் வாங்குங்கோ! ''என்று திட்ட வட்டமாகக் கூறினான். அவர்கள் இருவருக்கும் யோசினை. 'என்னடா இது, ஒரு வழியிலயும் இவங்களை இழுக்க முடியாமல் கிடக்குதே!'' என்று... சரி, தீர்மானித்தாயிற்று தேர்தலி லிருந்து வாபஸ் வாங்குவதாக.

இனி அடுத்த கட்டம் ஏனைய மாவட்டங்களுக்கு இந்த முடிவை அறிவிப்பது எப்படியென்று ''இண்டைக்கே அறிவியுங்கோ!'' என்றான் சீலன். அதற்கும் சம்மதித்தனர். பத்திரிகைகளுக்கும் அறிக்கை விடுவதாகக் கூறினர் எல்லாம் சுபம்.

இதற்கு அடுத்த கட்டம் - ''நீங்கள் வாபஸ் வாங்கிறதெண்ட முடிவோட, இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேணும் எண்டு ஒரு பத்தாயிரம் நோட்டீஸ் அடிச்சு மக்களுக்கு குடுத்தா என்ன?'' ஆலோசனை மாதிரியே வேண்டுகோள் விடுத்தான் சீலன். முழுக்க நனைந்தாயிற்றாம், இனி முக்காடு எதற்கு? - அதற்கும் சம்மதித்தனர் இருவரும். ஆனால், அவர்களுக்கு ஒரு சங்கடம். சங்கடமென்ன? அவர்களைப் பொறுத்த வரை அது தான் மகா பிரச்சினை - அடித்த நோட்டீசைக் கொடுப்பதற்கு ஆள் வேண்டுமே? குமாரும், நேருவும் தான் அங்கு சகலதுமே. யார் யாரோ, கையைக் காலைப் பிடித்து வேட்பாளராக நிற்கச் சம்மதம் வாங்கியாயிற்று. அவர்களைப் போய் 'நோட்டீசை'யும் கொடு என்றால் கொடுப்பார்களா? ஆனால், அதை எங்களிடம் எப்படிச் சொல்வது? நெளிந்தார்கள்

இருவரும் - ''சரி தம்பி...... இந்த அடிச்ச நோட்டீசை.........'' என்று இழுத்தார் குமார். எங்களுக்கு விஷயம் விளங்கினா லும், விளங்கியது மாதிரிக் காட்டிக்கொள்ள வில்லை. ''அடிச்ச நோட்டீசைக் குடுக்கிற தென்ன பிரச்சினையோ? நோட்டீஸ் குடுக் கேக்கை கூட்டணிக் காறர்கள் தலையிட்டா எங்களிட்டச் சொல்லுங்கோவன். நாங்கள் பாப்பம்!'' என்றான் சீலன். முடிவில் பேச்சு வார்த்தை பூர்த்தி. அன்று நடந்த இந்தப் பேச்சுவார்த்தையில் சீலன் எதையுமே விட்டுக் கொடுக்கவில்லை. ஒவ்வொரு வலை யாக வீச, வீச அதை லாவகமாகக் சுழற் றிக் கொண்டே இருந்தான் சீலன். எதிலும் சிக்கவில்லை இந்த மீன். இந்த அரசியல் அவர்களுக்குப் புதிது. எல்லோரையும் கவர்ந் திழுக்கும் ஆற்றல் சீலனுக்கு உண்டு என் பதைக் குமாரும் ஒப்புக் சொண்டார். ''உமக்குச் சரியான இரும்பு இதயம். எதுக் குமே வளைஞ்சு குடுக்க மாட்டீர்!'' - நட் புணர்வுடன் பாராட்டினார். ஒன்று மட் டும் நிச்சயம் நாங்கள் அந்த வாசலை மிதிக்கும் வரை அவர்கள் புலிகளைப் பற் றிய என்ன கணிப்பைக் கொண்டிருந்தார் களோ அது நாங்கள் போய் வரும்போது அடியோடு மாறிவிட்டது. ஒரு மனநிறை வுடன் தாமும் அங்கிருந்து புறப்பட்டோம். போகும் போது சீலன் அவரிடம் கேட் டான் ''நோட்டீஸ் எப்பஅடிக்கறீங்கள்?'' அதற்கு ''நாளைக்கே'' என்று பதில் கிடைத்தது. ''சரி அது சம்பந்தமா இவர் அடிக்கடி வந்து பார்ப்பார்'' என்று என் னைக் காட்டினான்.

அடுத்த நாள் நான் அங்கு சென்றேன், 'நோட்டீஸ் அடிச்சாச்சா''?

''இல்ல, நாளைக்கு'' அடுத்த நாளும் சென்றேன். — ''கொஞ்சம் சுணக்கம்' நாளைக்கு முடிஞ்சிடும்!'' அடிக்கடி நான் போய்க் கேட்பதால் அதை நாங்கள் விறி யோகிக்க ஆர்வம் கொண்டுள்ளோம் என்று கருதிக் கொண்டார்கள். அடுத்த நாள் காலை மீண்டும் அங்கு சென்றேன். ''பின் னேரம் 4.00 மணிக்கு முடிஞ்சிடும்; அப்ப வாங்கவன்!'' நோட்டீஸ் சம்பந்தமான ஒவ்வொரு முன்னேற்றத்தையும் என்னிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட சீலன், ''பின் னேரம் 4.00 மணிக்கு முடிஞ்சிடும்'' என்ற பதிலைக் கேட்டதும் சொன்னான்; ''இனி அங்கை போகாதை. எப்படியோ அடிச்ச நோட்டீசை அவை குடுக்கத் தானை வேணும்!''

இரு நாட்களின் பின் ஒரு செய்தி கிடைத்தது. ''வல்வெட்டித்துறையில 'எலக் ஷனைப்' பகிஷ்கரிக்கச் சொல்லிக் கொங்கி றஸ் ஒரு நோட்டீஸ் குடுக்குது. குமார் தான் வான் ஓடுறார்; மோதிலால் நேரு நோட்டீஸ் குடுக்கிறார்.''

மொழி பெயர்க்கப்பட்ட 'சண்டே ரைம்ஸ்' செய்தியை மீண்டும் படிக்கிறேன். —''இவ்வகையான காரணம் காட்டுதல் கள் தான் அகில இலங்கைத் தமிழ்க் காங் கிரசை, திரு. நேருவை வெளியேற்றும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்குகிறது!''—

ஒரு கையால் வாகனத்தை செலுத்திய படி மறுகையால் 'நோட்டீஸ்' குடுக்கும் காட்சி என் மனதில் தெரிகிறது. □□

வெளிவந்து விட்டது

**முத்தமிழ்விழா மலர் 1992**

தொடர்பு கொள்க:

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்
நடுவப்பணியகம்,
கோண்டாவில்.
தமிழீழம்.

# நெஞ்சில்நிற்கும் வாழ்வு

**மணலாறு விஜயன்**

நிலம் வெளிக்காத விடியல்.

படுக்கைப் பாயில் எழுந்து இருந்தேன். நேற்று நடந்த சம்பவமொன்று நினைவில் வந்தது.

அம்மாவுக்கு ஓய்வு வேண்டும்.

கைகள் ஆறவேண்டும்.

கண்கள் தூங்க வேண்டும். கூடவே வீட்டினையும் மாற்றி விடவேண்டும், இல்லையேல் துரோகிகள் படம் கீறி வவுனியா வியாபாரத்துக்கு விற்று விடுவார்கள்; நாளை சியாமா செற்றி விமானங்கள் வந்து குண்டுகளைத் துப்பிவிடும்.

இழக்கக் கூடாதவர்களை இழந்து விடுவோம்.

சிந்தனையின் வேக, வேகத்தோடு பொறுப்பாளரின் பணிமனைப் படிகளில் ஏறினேன்.

''வாருங்கோ மாஸ்ரர்; சாப்பிட்டாச்சோ?''

''கோகில்ன், மாஸ்ரருக்கு சாப்பாட்டைக் குடு; சாப்பிட்ட பிறகு கதைப்பம்.''

விருந்தோம்பல் குடிபிறப்பா?...... அல்லது கிராமத்தின் பண்பா?......

''நான் இப்பதான் உங்களின்ர, அம்மாவின்ர கையாலசாப்பிட்டிட்டு வாறன் கதையெல்லாம் கிடக்கட்டும், அம்மாவை வீடுமாத்தி கொஞ்சநாளைக்கு ஓய்வாய் இருக்கவிடோணும்.'' என்றேன்.

''கிழவி என்ன செய்யுது; ரெண்டுமூண்டு வரு

சமாய் போயும் பாக் கேல்ல.''

'என்ன செய்யுதோ?... ஒரு நாளைக்கு ஐம்பது பாசல்... நூறு பாசல்... எண்டு மாறிமாறிவர நித்திரையுமில்லாமல் சமைச்சுக் கொண்டிருக்குது ஒருவருசம் ரெண்டுவருசமெண்டால் பரவாயில்ல இண்டைக்குப் பத்துவருசமல்ல... பாவம் பாத்திரம் கழுவியே கை தேஞ்சு போச்சுது. நீங்களும் அந்த றோட்டால தானே நெடுகப்போய்வாறியள் பெத்த தாயை ஒருக்கா எட்டிப்பாத்தா குறைஞ்சா போயிடுவியள்.''

''எல்லாப் பெடியளுக்கும் தாய் இருக்குத்தான மாஸ்ரர், அவங்களுக்கும் தாயைப் பாக்கோணுமெண்டு ஆசையிருக்குந்தான; தாயைப் பாக்காமலே எத்தனபேர் செத்திட்டாங்கள்; நான் மட்டும் எப்பிடிப் போய் பாக்கிறது''

''பொறுப்பாளனுக்குரிய பதில்தான். தலைவன் சரியாகத்தான்வளர்த்திருக்கிறான்.'' என நினைத்துக் கொண்டேன்.

''போய்ப்பாக்க வேண்டாம்; வீட்டையாவது மாத்தி கொஞ்சநாளுக்கு ஓய்வாய் இருக்க விடலாந்தான.''

''சமைச்சுக்கொடுக்கட்டன்; வேற என்ன செய்யப்போறவாம்'' கல்நெஞ்சு.

அழுத்தமான வார்த்தை.

''அம்மா அடிப்போட இருந்தே செத்திடப்போறா இல்லாட்டிலும் அந்த வெட்டவெளியில கிடக்கிற வீட்டுக்கு 'பொம்மர்' அடிக்காமலா விடப்போறான்; அம்மா உங்களுக்காய் வாழாட்டிலும் மற்றப் பெடியளுக்காய் வாழோணும்.''

''சாகிற அண்டைக்கு சாகட்டன்; இருக்கும் வரை சமைக்கிற வேலை யாவது பாக்கட்டன்.''

இரண்டுபிள்ளைகளைக் களத்துக்கு அனுப்பி விட்டு ஓய்வின்றிச் சமைத்துக் கொண்டிருக்கும் அந்தத் தாய்க்கு ஓரளவு ஓய்வுகூட பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

நீண்ட நெடுமூச்சொன்றுடன் பாயைச் சுருட்டி வைத்துவிட்டுக் காக்கையன் குளக்கட்டினை நோக்கி நடந்தேன்.

பனிப்புகார் கிராமத்தை விழுங்கிக்கிடந்தது.

முறுக்கெடுத்து, கருக்கொண்ட கதிர்களை கக்கி நின்றன நெற்பயிர்கள்.

தலைப்பாகையும் மண் வெட்டியும், வாயில் வேப்பங்குச்சுமாய் வயல் நடுவே தண்ணீர் பாய்ச்சும் முதியவர்கள்......

மூடுபனி அவர்களை விழுங்கி விட முடியாது தான்.

போர்த்திருந்த போர்வையைச் சடாரென எடுத்துக்கொண்டேன் ஒரு காலத்தில் இந்த வளங்களையெல்லாம் முஸ்லீங்கள் தானே அனுபவித்தார்கள்.

காலைச் சாப்பாட்டுக்கு பாட்டிவீட்ட போகோணுமென தினேஷ் கூறியது ஞாபகத்துக்கு வந்தது.

குளக்கரையில் நின்ற ஆலமரத்தின் விழுதுத்துண்டொன்றை வாய்க்குள் செருகிக்கொண்டேன். சொற்பநேரத்தில் குளத்தில் இறங்கி முகம் கழுவி விட்டு விரைவாக நடந்தேன்.

நெடுக்குளம் பாட்டி வீட்டுக்குச் செல்லவேண்டும்

சில நிமிடத்துக்குள் மோட்டார் சைக்கிள் புறப்பட்டது. வீதியில் மாடுகள் படுத்திருந்தன. அவை இள வெயில் காய்ந்து கொண்டு

கிடந்தன. எங்களின் மோட்டார் சைக்கிளுக்கு அவை விலத்துவதாக இல்லை.

கிராமத்து மாடல்லவா. நாங்கள் தான் விலகிச் செல்ல வேண்டும்.

பாட்டிவீட்டு முற்றத்தில் மோட்டார் சைக்கிள் உறுமி நின்றது.

''பாட்டி...பாட்டி...''

''ஆரிடா அவன்., தினேசுக்கழுத மார்திரிக் கிடக்குது.'' பாட்டி வெளியே வந்தாள்.

என்னணை, கூப்பிடுறது சேக்கேல்லய.''

''இண்டைக்குத்தான் பாதை தெரிஞ்சுதோ; வாறது, அங்க இஞ்ச யெண்டுசுத்துறது.போறது. உந்தக்கிழவி விட்டபோய் என்ன செய்யிறதெண்டு நினைச்சியளோ.

அவன் ஜெயத்தான்... போனான்; ஒரே போக்குத்தான். எல்லாருமிபப பெரிய இடத்திலதான். கிழவி வீட்டில வந்து சாப்பிடோணுமெண்டு என்னெண்டு நினைப்புவரும்.''

பாட்டி உரிமையோடு பேசத்துவங்கினாள்.

''இண்டைக்குத்தானிணை வந்தனான். வந்த உடன நேர இஞ்சதான் வாறன்.'' என்றான் தினேஷ்.

''வாயமூடிடா; பொய் சொல்லுறோக்கும் அளவு வேணும்; முந்தனாளே வவுனியாவுக்கு வந்திட்டா யெண்டு கேள்விப்பட்டிடன்; வந்தது, இஞ்ச வருந்தான எண்டு உடுபபும் வாங்கி, பொட்டேட்ட காய்ச்சச் சொல்லிப் போட்டு, கேற்றக் கேற்றப் பாத்துக்கொண்டிருந்தன் ; எங்கயோ போய் நக்கிப் போட்டு,இண்டைக்கு வந்து நிக்கிறார்? போடா வெளியில.''

பெத்தபிள்ளையிடம் கூட இவ்வளவு உரிமையாகப் பேசமாட்டாள் பாட்டி, வவுனியாவில் போராளிகள் ஓடி ஓடிவந்து சாப்பிட்டிட்டு போற வீடுகளில் இதுவும் ஒன்று.

விடுதலைப்போர் தொடங்கியநாளிலிருந்து வவுனியாவில், எமதுபோராளிகள், ''அம்மா வீட்டுக்கு போட்டுவாறன்'' என்று சொன்னால் அது வேறு வீட்டைக் குறிக்காது.

வீட்டுச்கு முன்னே சற்றுத்தள்ளி பட்டிக்குள் நூறு இருநூறு மாடுகள் நின்றன பட்டி இன்னும் இறந்து விடப்படவில்லை யென்பது தெரிந்தது.

கடப்பருகே வெண்ணிறமான இரண்டு நாம்பன் கன்றுகள் கட்டப்பட்டிருந்தன.

வன்னியின் செல்வங்கள் அவை.

இன்று அவையிரண்டும் மட்டுமே முப்பதினாயிரம் ரூபா பெறும்.

குசினி வாசலில் தேசி மரமொன்று பழுத்துத் தொங்கியது. தேசிமரத்துக்குக் கீழ நாலைந்து கோழிகள் சாம்பல் குளித்துக் கொண்டு கிடந்தன.

குடத்தடியில் சாம்பல் மொந்தன் வாழை ஒன்றிரண்டு பழுத்த குலையுடன் நின்றது.

சுற்றிலும் அவதானித்துக் கொண்டிருந்த என் காதில் பாட்டியும் தினேசும் பேசிக் கொள்வதும் விழத் தவறவில்லை.

''எண, உன்னட்டயெண்டு வந்திருக்கிறன், என்ன சாப்பாடு தரப்போறாய் செல்லு.''

''ஓ,........ நீ வருவாயெண்டு நானென்ன மை போட்டே பாத்தனான், உவடமெல்லாம் சுத்திப் போட்டு விடியக்காலம வந்து நிண்டு கத்துறாய்;

சும்மாவந்து என்ன, பேக் காட்டிப்போட்டு போகுலாமெண்டு வந்தனிய"

பாட்டி கதைத்துக் கொண்டிருக்கும் போதே குசினிக்குள் அடிக்கடி போய்வந்தாள்.

"பாட்டி, தினேசுக்கு கலியாணம் நடக்கப்போகுது; அதுதான் ஆள், உங்களுக்கு சொல்லிப் போட்டு போக வந்திருக்குது." என்றேன்.

"ஆர், உவனுக்கோ! பொம்பிளையள திரும்பியும்பாக்கத உவனுக்கு ஆரும் பொம்பிள குடுப்பாங்கள. எங்கயெண்டாலும் ஒரு பிராமணத்தியப் பாத்துதான் கட்டிவைக்கோணும். இந்த ஜென்மத்தில உவனுக்கு ஒருதரும் பொம்பிள குடுக்கமாங்கள்; பரதேசி; எனக்கு தெரியதே உவனப்பற்றி."

பாட்டி தினேசைப் பற்றி எந்தளவுக்கு எடை போட்டு வைத்திருக்கின்றாள்.

"ஏன் மற்றது; அது. தான் ஜெயத்தான்; அவனிட்ட போய் சொல்லு என்ர செத்த வீட்டுக்கும் மூத்தத்தில மிரிக்க வேண்டமண்டு.

"பாரிடா மோன உவங்களுக்கெல்லாம் இப்ப ஆக்கள் கூடிப் போச்சு." என்று கூறிக்கொண்டே, குசினிக்குள் சென்றவள் புட்டுப் பீங்கானுடன் வெளியே வந்தாள்......

பச்சையரிசிப்புட்டு. உடும்பிறச்சிக்கறி... பொரியல்......

ஒரு கிண்ணிக்குள் பிளந்து பிளந்து கிடக்கும் பசுத்தயிர்.

"ஏன் பாட்டி, கறியொண்டும் இல்லையெண்டு சொன்னியள்; தினேசைப் பேசினியள்; இப்ப"......

"என்ன செய்யிறது; சுத்திக்கொண்டு இஞ்ச வராமல் போகானெண்டு எனக்குத் தெரியும்; அதால இறச்சியை வாங்கி அவிச்சு வச்சனான் இதுகள் இருந்தாப்போல கவிண்டுபோகிடுங்கள், இப்ப வயது போனதுகள் சாகிறேல்லத்தான; சாப்பிடாமல் போய் செத்துப்போச்சுதுகளெண்டால் நினைச்சு நினைச்சு அழோணும்."

பாட்டியின் அன்பின் ஆழத்தை நினைத்தபோது கண்கள் கலங்கின.

சாப்பிட்டு முடிந்ததும் வாழைப்பழத்தை உரித்துத் கையில் தந்தாள்.

பக்கத்தில் பசுப்பாலில் காய்ச்சிய பாயாசம்......

சாப்பிட்டு முடிந்ததும்

"எண போட்டு வரப் போறன்"...... என்றான் தினேஷ்.

"போட்டுவா; அவன் ஜெயத்தானிட்ட சொல்லு; கிழவி இன்னும் உயிரோடதான் இருக்குதாமெண்டு" என்று கூறிவிட்டு கண் கலங்க தினேஷின் கன்னத்தை இரு கைகளாலும் தடவி விடைகொடுத்தாள்.

மோட்டார் சைக்கிள் நெடுக்குளம் தாண்டி ஓடிக் கொண்டிருந்தது.

பாட்டியின் சுருக்கு விழுந்த முகம்...... மடிப்பு விழுந்த நெற்றி..... அந்த நெற்றியில் இருந்த திருநீற்றுப்பூச்சு... பஞ்சுபோன்ற தலைமுடி......

பாட்டியும், அந்தப் பொறுப்பாளரின் அம்மாவும் மாறிமாறி கண்ணில் தெரிந்துகொண்டிருந்தனர். இவர்களைப் போன்றவர்கள் எம்மண்ணில் இருக்கும் வரை வீரமும், பண்பாடும் அழிந்து விட முடியாது என்ற உண்மை மட்டும் உறுதியாகத் தெரிந்தது. □

## பார்

மானன்

பரமசிவன் கழுத்தில்
பாம்பு கிடந்து கொண்டே
அரவமிடுவது பார்! - கருடன்
அசையாதிருப்பதும் பார்!

எதிரியின் காலை நக்கும்
இழிந்த பிறப்பினர்கள்
சதிகள் புரிவது பார்! - புரிந்தும்
சரிவராதுள்ளதும் பார்!

கூலிக்கு மாரடிக்கும்
கோணங்கிக் காரர்களின்
போலிப் பிரச்சாரம் பார்! - அதற்கே
போடும் நிவாரணம் பார்!

விடணன், யூதாஸ், கோட்சே
விரும்பிய வற்றை யெல்லாம்
தேடத்துடிப்போரைப் பார்! - உயிராய்ச்
செத்துக்கிடப் போரைப் பார்!

காட்டிக் கொடுப்பதையே
கடமையாய்க் கொண்டிருக்கும்
போட்டிக் குழு வாரைப் பார்! - வருநாள்
போக்கிடம் இல்லாரைப் பார்!

வெல்ல முடியா மையால்
வேறு வழிகளின்றிக்
கொல்லைப் புறத்தினிலே - அமர்ந்தே
குடித்தனம் செய்பவர் பார்!

வாயினில் உள்ள வீரம்
வருமானம் தேடுமென்றால்
நோயில் கிடப்பார்களோ? - உயிரை
நொடியில் முடிப்பார்களோ?

எதையேனும் உண்டுடுத்தே
எப்படியேனும் வாழ்ந்தே
சதையை வளர்ப்போர்களே - நிதமும்
சதியை வளர்ப்பீர்களே!

# நெய்தல்

## ஒரு

## மதிப்பீடு

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

ஒன்பது பாடல்கள் கொண்ட 'நெய்தல்' ஒலிப்பதிவு நாடா விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினாலே வெளியிடப்பட்டுள்ளது. கடலும் கடல் சார்ந்த இடம் பண்டைத் தமிழ் இலக்கியங்களிலே நெய்தல் என்ற பெயராலே அழைக்கப்பட்டது. இங்கு மதிப்பீட்டுக்கு எடுக்கப்பட்டுள்ள இசை நாடாவிலே அமைந்துள்ள பாடல்கள் யாவும் கடற்கரைப் பிரதேசத்தையும், அப்பிரதேசத்து மக்கள் வாழ்வினையும் வெளிக்காட்டுவனவாக அமைந்துள்ளன.

சங்க இலக்கியங்களிலே நெய்தற்பாடல்களைப் படிப்பவர்கள் இரண்டு வகையான உணர்வுகளை அவற்றின் மூலம் இனங்கண்டு கொள்வர். ஒன்று, கடலிலே மீன் பிடிக்கச் செல்பவர், கப்பல் ஓட்டுபவர் ஆகியோருடைய வீரம்; மற்றையது, நெய்தல் நிலப் பிரதேசத்து மக்களுடைய இரங்கத் தக்க வாழ்வு. இவ்வொலிப்பதிவு நாடாவிலே அமைந்துள்ள பாடல்களிலே இவ்விரு உணர்வுகளும் சிறப்பாகப் புலப்படுத்தப்பட்டுள்ளன,

ஆழக் கடலெங்கும் சோழமகாராஜன்
ஆட்சி புரிந்தானே அன்று — தமிழ்
ஈழக் கடலெங்கும் எங்கள் கரிகாலன்
ஏறி நடக்கின்றான் இன்று
காலை விடிந்ததென்று பாடு — சங்க
காலம் திரும்பியது ஆடு

என்று ஒலிப்பதிவு நாடாவின் முதற்பாடலே விறுவிறுப்புடன் வீர உணர்வு பொங்கிட அமைந்து விடுகின்றது. கடற்காவியப் பாடல்களுக்கு இது நுழைவாயிலாக அமைந்து விடுகின்றது. இதே போன்று "கடலதை நாங்கள் வெல்லுவோம்" என்ற பாடலும் வீர உணர்வு புலப்படும் பாடலாக அமைகின்றது. இன்னொரு புறத்தில், நெய்தல் நிலத்துக்கேயுரிய சோக உணர்வும் சில பாடல்களாலே புலப்படுத்தப் படுகின்றது. நெய்தல் நில மகளிர் மிகவும் பரிதாபத்துக்குரியவர். "கரைமேற் பிறக்க வைத்தான் எங்களைக் கண்ணீரில் மிதக்க வைத்தான்" என்பது அவர்களது அனுபவ உணர்வு. இன்று மாலை படகுகளிலே கடலுக்குச் செல்லும் மீனவர், அடுத்த நாள் திரும்பி வரும் வரை என்ன நடக்குமோ என்று வீட்டிலுள்ள மகளிர் ஏங்குவது இயற்கை வாழ்வு, இவ்விதம் இயற்கையான சோக வாழ்வுடன், தங்கள் இளங் குருத்துகளின் கடல் வீரத்தின மத்தியிலும் ஏற்படும் சிறு சோகங்களும் கலக்கும் போது ஏற்படும் இரங்கு நிலையை நாம் வார்த்தைகளாலே வடித்துவிட முடியாது. இதற்காகத்தான், வார்த்தைகளுடன் இசையினையும் சேர்த்து நெய்தல் நில மக்களின் இரங்குணர்வை இவ்வொலிப்பதிவு நாடா மூலமாகப் புலப்படுத்துகின்றனர். "வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம்" என்னும் பாடல் இதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாகும்.

நாட்டார் இசை என்றுமே உயிர்த் துடிப்பும் இனிமையுமுடையது. உயர் இசை, மெல்லிசை என்பனவற்றுடன் நாட்டார் இசை சேருமிடத்து அக்கலவை புதிய தன்மையுடைய இசையினை எமக்கு நல்கும். அது மிகுந்த கவர்ச்சி ஆற்றலுடையதாக அமையும்.

"முந்தி எங்கள் பரம்பரையின் கடலம்மா
— கரை
முற்றும் நாங்கள் குடியிருந்த மடியம்மா"

என்ற பாடல் அத்தகைய கவர்ச்சி ஆற்றல் உடையதாக அமைகின்றது. அப்பாடலின் இன்னொரு பகுதி,

"அழுது கொண்டும் தொழுது கொண்டும்
இன்னும் வாழ்வதோ — எங்கள்
அப்பு ஆச்சி வாழ்ந்த மண்ணை
எதிரி ஆள்வதோ"

என அமைகின்றது அம்பாப் பாடலோசையும் கப்பற்பாட்டிசையும் நன்கு பொருந்த, பாடலைப் பாடிய ஆண்குரலும் பெண்குரலும் நன்கு இசைவுறப் பாடல் அமைகின்றது.

கடல், கடலலை, கடற்கரை வாழ் மக்கள், தமிழர் கடல்வீரவரலாறு இவற்றையெல்லாம் இன்றைய கடற் போராளிகளுடைய அனுபவ உணர்வுகளுடன் இணைத்துப் பாடல்கள் புனையப்பட்டுள்ளன. அப்பாடல்கள் புலப்படுத்தும் உணர்வுகளுக்கேற்ற இசை வழங்கப்பட்டுள்ளது. இப்பாடல்களைக் கேட்பவர்கள் நிச்சயமாக உள்ளம் உருகுவார்கள்; புதிய வீறுடைய உணர்வு பெறுவார்கள். பாடல்களைப் புனைந்த கவிஞர்களும் இசை வழங்கிய இசை வல்லாளனும் பாராட்டுக்குரியவர்கள்.

காலை விடிந்ததென்று பாடு — சங்க
காலம் திரும்பியதென் றாடு

என்ற பூரிப்புணர்வினை 'நெய்தல்' ஒலிப் பதிவு நாடா நமக்கு வழங்குகின்றது.

பாடசாலைப் பிள்ளைகளுக்கேற்ற
உன்னத சத்துள்ள மதிய உணவு

**ஜீவாகாரம்**

சிறந்த சத்துணவான ஜீவாகாரம்
அரிசிமா, சோயாமா, உழுத்தம் மா
என்பன விகிதாசாரத்தில் கலக்கப்பட்ட
முழுமையான சத்துணவு

**ஜீவாகாரம்**

உள்ளூர் உற்பத்தியை
ஊக்குவித்து

''அண்ணா'' தொழிலகம் தருவது

**ஜீவாகாரம்**

முழுக் குடும்பத்துக்கான உப உணவு

100 கிராம் ஜீவாகாரத்தில்
17 கிராம் புரதம்
400 கிலோ கலோரி சக்தியுண்டு

உங்கள் தேவையை பூர்த்தி செய்பவர்கள்

**அண்ணா தொழிலகம்**

இணுவில்.

**அண்ணா பற்பொடி**
**அண்ணா கோப்பி**
**அண்ணா இனிப்பு வகைகள்**
**ஜீவாகாரம்**

போன்றவற்றுக்கு

**அண்ணா தொழிலகம்**

இணுவில்.

நம்பிக்கையான சேவை செய்பவர்கள்

அருச்சுனா
ரான்ஸ்போட்ஸ்

பார வண்டி (லொறி) யில்
உங்கள் பொருட்களைப்
பாதுகாப்பாக
எடுத்துச் செல்ல
அருச்சுனா
ரான்ஸ்போட்ஸ்

லொறிச் சேவையில்
புகழ் பெற்று
நம்பிக்கையும்
உத்தரவாதமும்
இணைந்து,
சேவையாற்றுவோர்

# அருச்சுனா ரான்ஸ்போட்ஸ்

**பிராம்பத்தை,**

**பண்டத்தரிப்பு.**

வாசகர்களே!
இலக்கிய ஆர்வலர்களே!
நூலகப் பேராளரே!
பள்ளிச் சிறுவர்களே!

உங்கள் தேவை தான் என்ன?
போராட்ட நூல்களா?
நாவல் இலககியமா?
நவீன கவிதைகளா?
பாட நூல்களா?
இலக்கிய ஆராய்ச்சியா?

கவிதை,
நாவல்,
இலக்கியம்,
அரசியல் போன்ற அனைத்து நூல்களையும்
பெற்றுக் கொள்ளவும்
பாடசாலை நூல்கள், உபகரணங்களை
குறைந்த விலையில் கொள்வனவு
செய்யவும்

# தமிழ்த்தாய் புத்தகசாலை

**191, மின்சார நிலைய வீதி,**
(பஸ் நிலையம் முன்பாக)
**யாழ்ப்பாணம்.**

அத்தியாவசியப் பொருட்களை
மொத்தமாகக்
கொள்வனவு செய்பவர்களும்
விற்பவர்களும்

## "திருநெல்வேலி"

**மொத்தக் கொள்வனவு விற்பனை நிலையம்**
**பலாலி வீதி,**
**திருநெல்வேலி.**

**உங்கள்**
**தேவை எதுவாக இருந்தாலும்**
**வாருங்கள்;**

தரமான குத்தரிசி
உடைத்த பச்சை அரிசி
தீட்டிய பச்சை அரிசி
சம்பா அரிசி
போன்ற
சகல விதமான
அரிசி வகைகளையும்
பெற்றுக் கொள்ள
உங்கள்
நம்பிக்கைக்குரியவர்கள்

கொக்குவில்

**ராஜா அரிசி ஆலை**

நிறுவனத்தினர்

•

நெல், மற்றும்
தானிய வகைகளை
குறைந்த கட்டணத்தில்
நல்ல முறையில்
குத்திக் கொடுப்பவர்கள்

•

## ராஜா அரிசி ஆலை

**கொக்குவில்.**